விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 140 வள்ளுவர் ஆண்டு 2057 சித்திரை 25 வெள்ளிக்கிழமை (08.05.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வரை

# தோண்டத் தோண்ட வெளிவரும் சிறுவர்களின் என்புக்கூடுகள்

## செம்மணி மனிதப் புதைகுழியில் பதற வைக்கும் மர்மங்கள்




(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியிலிருந்து புதிதாக நான்கு சிறுவர்களது மனித என் புக் கூட்டுத்தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஆதிவாசிகளின் தலைவர் மரணம்



15ஆம் பக்கம் பார்க்க

## அவசர காலநிலை சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பொது அவசரகால நிலையை

15ஆம் பக்கம் பார்க்க

## உணவு பொதியிடலுக்கு லஞ்சீற் பாவனை

### பருத்தித்துறை நீதிமன்றால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம்

(கரணவாய்)

பருத்தித்துறையில் உண வுப் பொதியிடலுக்கு லஞ்ச் சீற் பயன்படுத்திய உணவு கையாளும் நிலையத்துக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணம் அற விடப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை அலைக்கழிக்கும் அதிகாரிகள்

### வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்



(யாழ்ப்பாணம்)

விபரிக்க முடியாத கண்ணீரோடு வாழும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஒரு சில அதிகாரி கள் அலட்சியத்துடன் அலைக்கழிக்கின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குற்றம் சுமத்தியுள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

### மாணவர்களிடையே பரவும் வைரஸ் காய்ச்சல்

## தெனியாய கல்வி வலயத்தில் நான்கு பாடசாலைகள் மூடல்

(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களி டையே காய்ச்சல் வேகமா கப் பரவி வருவதன் காரண மாக தெனியாய கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு பாடசாலைகளை இன்று (08) மூடுவதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெனியாய வலயக் கல்விப் பணிப்பாளர் நிஷாகா

02ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை வந்தடைந்தார் வியட்நாம் ஜனாதிபதி

### இன்று பாராளுமன்றத்தில் விசேட உரை



(கொழும்பு)

வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் இன்று (08) பாராளுமன்றத்தில் விசேட உரை யொன்றை நிகழ்த்தவுள்ளார்.

இன்று முற்பகல் 11.05 மணிக்கு பாராளுமன்றத்திற்கு வருகை தர வுள்ள

02ஆம் பக்கம் பார்க்க

### 5 ஆயிரம் அமெரிக்க

## டொலர்களைத் தாண்டிய தனிநபர் வருமானம்

(கொழும்பு)

இலங்கையின் தனிநபர் வருமானம் வரலாற்றில் முதல்முறையாக 5000 அமெ ரிக்க டொலர்களைத் தாண்டி யுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பேரா சிரியர் ருவன் ரணசிங்க தெரி வித்துள்ளார்.

நேற்று (07) பாராளுமன் றத்தில் உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

### முறிகண்டியில்

## ரயில் மோதி ஒருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முறிகண்டி புகையிரத நிலையத் திற்கு அருகில் புகையிரத பாதையில் அமர்ந்திருந்த வர்

15ஆம் பக்கம் பார்க்க

## 40 நாடுகளின் பயணிகளுக்கு 30 நாட்கள் இலவச விசா

(கொழும்பு)

சுற்றுலாத்துறை சேவை கைத் தொழிலை மேம் படுத்தும் பொருட்டு அமெ ரிக்கா, பிரித்தானியா, சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா உட்பட பிரதான 40 நாடு களுக்கு 30 நாட்களுக்கு இலவச விசா வழங்க அனு மதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் 06 மாதத்துக்கு ஒருமுறை மீள் பரிசீலிக்கப்படும் எனப் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜே பால தெரிவித்தார்.

16ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பிலும் இணைபிரியாத சகோதர பாசம்



உடல் நலம் குன்றியிருந்த ஓய்வுநிலை ஆசிரியரான திருமதி சந்திரவதனா சிவமணி இறந்து விட்டார் என்ற துயரச் செய்தி அறிந்ததும் அவரைப் பராமரித்து வந்த அவரது மூத்த சகோதரி சந்திரோதயம் சிவசம்பு துயரம் தாங்காத அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

இச்சம்பவம் மண்டைதீவில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ந)

(மண்டைதீவு)

தங்கை இறந்த துயரம் தாளாத அதிர்ச்சியில் அக்காவும் உயிரிழந்த துயரச் சம்பவம் மண்டைதீவில் நடந்துள்ளது.

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்று வெளியாகும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இன்று 08 ஆம் திகதி அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் என இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான அனைத்து முதற்கட்ட ஏற்பாடுகளும் மற்றும் இறுதிச் சரிபார்ப்புப் பணிகளும் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளன.

இதற்கமைய, இன்று வெள்ளிக்கிழமை மே 8ஆம் திகதி முதல் பரீட்சார்த்திகள் தங்களது பெறுபேறுகளை www.doenets.lk www.results.exams.gov lk இணையதளம் வாயிலாக அறிந்துகொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் அல்லது ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் பரீட்சைத் திணைக்களத்தின் அவசர உதவி இலக்கமான 1911 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். அல்லது பாடசாலைப் பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகள் பிரிவை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். (ம-7)


## 25வது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர் அருளானந்தம் சாருயன் (குட்டி)

தோற்றம் 08.05.2001 — மறைவு 28.11.2023

சாருயனே! இன்று உன் 25வது பிறந்த நாள்.
இன்று நீ உலகிற்கு வந்த நாள் மட்டும் அல்ல,
எங்கள் வாழ்க்கைக்கு ஒரு அழகான காரணம் கிடைத்த நாள்.
ஆனால் நீ இல்லாததால்,
இன்று வீடு முழுவதும் மௌனம் பேசுகிறது...

சிரிப்பாய் வந்த நீ,
இன்று நினைவாய் மட்டும் வாழ்கிறாய்!
எங்கள் கண்களில் தினமும் கண்ணீராய் தோன்றுகிறாய்.
கேக் இல்லை, மெழுகுவர்த்தி இல்லை
ஆனால் உன் நினைவுகள் மட்டும்,
இன்றும் நெஞ்சில் அணையாத தீபமாக எரிகிறது.

நீ எங்கே இருந்தாலும்...
எங்கள் அன்பும் நினைவுகளும் உன்னைத் தேடி வரும்...
உன் நினைவு என்றும் எங்கள் உயிரில் வாழும்...

குடத்தனை வடக்கு, குடத்தனை. (C-5590) குடும்பத்தினர்


## இலங்கை...

வியட்நாம் ஜனாதிபதியை, சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் வரவேற்பார்கள்.

இதனைத் தொடர்ந்து, வியட்நாம் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் இடையில் குறுகிய சந்திப்பொன்று நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளதாக பாராளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை - வியட்நாம் நட்பு சங்கத்தின் தலைவரான அமைச்சர் தம்மிக படபெந்தி மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-7)

## தெனியாய...

ஹெட்டிகொட தெரிவித்துள்ளார். இதற்கமைய தெனியாய மத்திய கல்லூரி, தெனியாய ராஜபக்ஷ மகா வித்தியாலயம், தெனியாய புனித மெத்தியூ இருமொழி பாடசாலை மற்றும் பல்லேகம சித்தார்த்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன.

குறித்த பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே நோய்ப் பரவல் அதிகரித்துள்ளமையைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும் பிள்ளைகளுக்கு நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறச் செய்யுமாறும் சுகாதாரப் பிரிவினர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ம-7)


## 69 ஆவது ஜனன தினமும் 114 ஆம் நாள் நினைவஞ்சலியும்



அமரர் அப்புத்துரை இராஜேந்திரம்

மண்ணுலகில் 08.05.1957 — விண்ணுலகில் 15.01.2026

அன்பான அப்பா ஏன் இந்த அவசரம்!
எமை விட்டுப் பிரிய! எனி நாம் எங்கு காண்போம்
உங்களை! நீங்கள் எம்முடன் இல்லை என்பதை
மனம் ஏற்க மறுக்கின்றது. எதுவும் நிரந்தரம்
இல்லை என்பதை உணர்த்திச் சென்று விட்டீர்கள்
மனம் வலிக்கின்றது! நெஞ்சு பொறுக்குதில்லையே
அப்பா உங்கள் ஆத்மா இறைவன் திருவடி
நிழலில் அமைதி பெற இறைஞ்சுகின்றோம்
அன்பான அப்பா இன்று நீங்கள் இருந்திருந்தால் இன்று
உங்களுக்கு அறுபத்தி ஒன்பதாவது பிறந்தநாள்.

(2297)

நெளுக்குளம், வவுனியா

உங்கள் அன்பு மனைவி, மகள், மகன், மருமகன், மருமகள், பேரக்குழந்தைகள்



## முதலாம் ஆண்டு நினைவுநாள்

2026.05.08



மலர்வு 1963.12.08 — உதிர்வு 2025.04.20

அமரர் செல்வி. மாலதி அருணாசலம்

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
உறவினர்களின் அரவணைப்பாய் இருந்து,
உறவுகளைப் புரிந்து வழி நடாத்தி சிநேகிதர்களை நேசித்து,
அனைவருடனும் இணைந்திருந்து, நல்லன பல செய்து,
மனிதநேய வழியில் அனைவருக்கும் உதவிகள் பல புரிந்தும்,
தனது வாழ்க்கையைப் பற்றி யோசிக்காமல் மற்றவர்களின்
சந்தோசம் தனது சந்தோசம் என வாழ்ந்து காட்டிச் சென்ற
பாசத்திற்குரிய மாலதி அவர்களின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

466/7, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(7558)

என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து நிற்கும் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீண்டும் மின்சாரக் கட்டண உயர்வு ஏற்றுமதித் துறை முடங்கும் அபாயம்

## உற்பத்தியாளர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் "பவர் வீலிங்" எனப்படும் மின்சார விநியோக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தாமல், ஏற்றுமதித் தொழிற்சாலைகள் மீது மீண்டும் மின்சாரக் கட்டண உயர்வைத் திணிப்பது நாட்டுக்கு பாரிய பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும் என ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் எச்சரித்துள்ளனர்.**

குறைந்த மழைவீழ்ச்சி, நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தின் செயலிழப்பு மற்றும் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால் மின்சாரத் துறையில் ஏற்பட்டுள்ள 38 பில்லியன் ரூபாய் நட்டத்தை ஈடுகட்ட, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த வாரம் விசேட கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிலையில், சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் சங்கம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில்,

அரசாங்கம் 95 சதவீதமான சிறிய நுகர்வோருக்கு மானியம் வழங்கியுள்ள நிலையில், 38 பில்லியன் ரூபாய் நட்டத்தில் சுமார் 23 பில்லியன் ரூபாயை தொழிற்சாலைகள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்களே சுமக்க வேண்டியுள்ளது.

அத்துடன், இந்தியா, வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மின்சாரக் கட்டணம் அதிகமாக இருப்பதால் சர்வதேச சந்தையில் எமது ஏற்றுமதிப் பொருட்களின் விலை அதிகரித்து, கேள்விக்குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்டத்தின்படி, தொழிற்சாலைகள் நேரடியாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடம் மின்சாரத்தைப் பெற்று, தேசிய மின் கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கு அனுமதி உள்ளது. ஆனால், இதுவரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் சில கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளன.

குறைந்த விலையில் கிடைக்கும் சூரிய சக்தி அல்லது காற்றாலை மின்சாரத்தை நேரடியாகப் பெற்றுக்கொள்ளும் வசதியை உடனடியாக வழங்க வேண்டும்.

தொழிற்சாலைகள் மீதான கட்டண உயர்வுக்கு ஒரு உச்ச வரம்பை நிர்ணயிக்க வேண்டும். இந்தக் கட்டண உயர்வு தற்காலிகமானதாக இருக்க வேண்டும். 2026 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுடன் இது தானாகவே காலாவதியாக வேண்டும்.

மின்சார சபை எதிர்பார்த்ததை விட குறைந்த நட்டம் அல்லது லாபம் ஈட்டினால், மேலதிகமாக அறவிடப்பட்ட பணத்தை நுகர்வோருக்கு மீள வழங்க வேண்டும்.

தொழிற்சாலைகளுக்கு நேரடியாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை வழங்க அனுமதிப்பதன் மூலம், இலங்கையின் எரிபொருள் இறக்குமதிச் செலவை ஆண்டுக்கு சுமார் 50 முதல் 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை குறைக்க முடியும் என உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏற்கனவே கடந்த ஏப்ரல் மாதம் 8.7 சதவீதக் கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் ஒரு உயர்வு ஏற்பட்டால் அது 2026 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி ஒப்பந்தங்களைப் பாதிக்கும் என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (நி)

# தோல் புற்றுநோயாளர்கள் சடுதியாக அதிகரிப்பு!

(கொழும்பு)

நாட்டில் தோல் புற்றுநோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிகபடியான சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

புற்றுநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஹசந்தி ஜெயலத் இது குறித்துத் தெரிவிக்கையில், நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 35,000 தோல் புற்றுநோய் சம்பவங்கள் பதிவாவதுடன், கிட்டத்தட்ட 15,000 உயிரிழப்புகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டார். அத்துடன், தினமும் சராசரியாக 100 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்படுவது நோயின் தீவிரத்தன்மையைக் காட்டுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சூரிய ஒளி மிகத் தீவிரமாக இருக்கும் காலை 10மணி முதல் மாலை 4 மணி வரையான காலப்பகுதியில் நேரடியாக வெயிலில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். சூரிய ஒளியினால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க குறைந்தது SPF 30 கொண்ட சூரிய பாதுகாப்பு களிம்புகளை பயன்படுத்துவது அவசியம்.

வெளியில் செல்லும் போது தொப்பிகள் மற்றும் தோலை முழுமையாக மூடியிருக்கும் வகையிலான பாதுகாப்பு ஆடைகளை அணியுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.


தோலை வெண்மையாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் சில களிம்புகள் தொடர்பில் வைத்திய நிபுணர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இத்தகைய தயாரிப்புகளில் ஹைட்ரோகுவினோன், பாதரசம் மற்றும் ஸ்டெராய்டுகள் போன்ற ஆபத்தான இரசாயனங்கள் கலந்திருக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக ஸ்டெராய்டுகள் தோலின் தடிமனைக் குறைத்து, அதன் இயற்கையான பாதுகாப்புத் திறனை வலுவிழக்கச் செய்வதன் மூலம் புற்றுநோய் அபாயத்தை அதிகரிப்பதாக அவர் விளக்கினார்.

தோல் புற்றுநோய்களில் "மெலனோமா" வகை மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது. இது மிக வேகமாக உடல் முழுவதும் பரவக்கூடியது என்பதால், ஆரம்பத்திலேயே கண்டறிவது அவசியமாகும்.

தீவிர சூரிய ஒளி நிலவும் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வை மேம்படுத்த வேண்டியது அவசியம் என சுகாதார அதிகாரிகள் மேலும் வலியுறுத்தியுள்ளனர். (நி)

# களுகங்கை பாலத்தில் சிற்றூர்தி விபத்து



(கொழும்பு)

கட்டுநாயக்காவில் இருந்து கஹவத்தை நோக்கி பயணித்த சிற்றூர்தி ஒன்று நேற்று அதிகாலை இரத்தினபுரிப் பகுதியில் அமைந்துள்ள களு கங்கை பாலத்தில் விபத்துக்குள்ளானது.

பாலத்தின் மீது கட்டுப்பாட்டை இழந்த குறித்த வாகனம் மோதியதில் அதில் பயணித்த 9 பேர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

விபத்து நேரத்தில் வாகனம் களு கங்கையில் விழுந்திருக்குமானால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் நிலை இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)


# ரைஸ், பிரியாணி விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஃபிரைட் ரைஸ், பிரியாணி மற்றும் நாசி கோரெங் ஆகியவற்றின் விலைகளைநள்ளிரவு முதல் 25 ரூபாவினால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதேநேரம், சாதாரண தேநீரின் விலையை 5 ரூபாவினாலும், பால் தேநீரின் விலையை 10 ரூபாவினாலும் அதிகரிப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சிற்றுண்டிகளின் விலையும் 5 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளதாக



சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷன் தெரிவித்தார். எனினும், முட்டை ரொட்டி, பரோட்டா மற்றும் கொத்து ரொட்டி ஆகியவற்றின் விலையில் எந்த உயர்வும் மேற்கொள்ளப்படவில்லை.

உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை லாஃப்ஸ் கேஸ் நிறுவனம் அதிகரித்ததை தொடர்ந்து இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. (நி)

# மோசடிகளில் ஈடுபட்ட மேலும் பல வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

விசா நிபந்தனைகளை மீறி நாட்டில் தங்கியிருந்து நிதி மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வெளிநாட்டினர் குழு ஒன்று, கொழும்பு, மாத்தறை பகுதியில் தனித்தனியாக நடத்தப்பட்ட சோதனைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு ஒன்று, கொள்ளுப்பிட்டி உத்தரானந்த மாவத்தைப் பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பு வளாகத்தில் நேற்று மாலை சோதனை நடத்தினர்.

இதன்போது, 41 ஆண் சந்தேக நபர்களும், 33 பெண் சந்தேக நபர்கள் உட்பட மொத்தம் 74 வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 19 முதல் 39 வயதுக்குட்பட்ட வியட்நாம் நாட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

இது தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், மாத்தறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு, நேற்று மாலை கந்தறை பகுதியில் உள்ள ஒரு விடுதியில் சோதனை நடத்தினர்.


இதன்போது, ஒரு பெண் சந்தேக நபர் உட்பட மேலும் ஆறு வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

சுற்றுலா விசாக்களில் நாட்டில் தங்கியிருந்தபோது வணிகம் செய்ததற்காகவும், வெளிநாட்டு சிகரெட்டுகளை வைத்திருந்ததற்காகவும் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் 25 முதல் 40 வயதுக்குட்பட்ட தாய்வான் மற்றும் சீன நாட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து கந்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பஞ்சாப்பை வீழ்த்தி முதலிடத்துக்கு முன்னேறிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத்




ஹைதராபாத்திலுள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் புதன்கிழமை அன்று நடந்த போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிராக 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியானது வெற்றியீட்டியது.

இந்த வெற்றியுடன் பேட் கம்மின்ஸ் தலைமையிலான அணியானது 11 ஆட்டங்களில் 14 புள்ளிகளுடன் நடப்பு இந்தியன் பிரீமியல் லீக் தொடரின் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

தொடக்கத் துடுப்பாட்ட வீரர்களான அபிஷேக் சர்மா மற்றும் டிராவிஸ் ஹெட் ஆகியோரின் வலுவான துடுப்பாட்டத்துடனும் ஹென்ரிச் கிளாசென் மற்றும் இஷான் கிஷன் ஆகியோரின் அரை சதங்களின் உதவியுடன் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 235 ஓட்டங்கள் எடுத்தது.

ஹென்ரிச் கிளாசென் 43 பந்துகளில் 69 ஓட்டங்களையும் இஷான் கிஷன் 32 பந்துகளில் 55 ஓட்டங்களையும் அணி சார்பில் அதிகபடியாக எடுத்தனர்.

பின்னர் கடினமான இலக்கினை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரேயஸ் அய்யர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 202 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

ஏமாற்றமளித்த பவர்பிளே ஆட்டத்திற்குப் பின்னர் இன்னிங்ஸில் ஒருபோதும் முன்னிலை பெறாத பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு கூப்பர் கொன்னலியின் (59 பந்துகளில் 107 ஆட்டமிழக்காத ஓட்டம்) சதம் மட்டுமே ஆறுதலாக இருந்தது.

இதன் மூலம் ஹைதராபாத்தில் நடந்த ஐ.பி.எல் போட்டியில் பஞ்சாப் அணி தொடர்ச்சியாக ஒன்பதாவது தோல்வியைச் சந்தித்தது.

அதேநேரம் இந்த ஏழாவது வெற்றியின் மூலம் ஹைதராபாத் அணி 14 புள்ளிகளைப் பெற்று 10 அணிகள் கொண்ட புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

மீதமுள்ள மூன்று போட்டிகளில் இன்னும் ஒரு வெற்றி பெற்றால், பிளே-ஆஃப் இடத்தை உறுதி செய்வதற்குப் போதுமான தாகப் புள்ளிகளை அவர்கள் பெறுவார்கள். (நி)


# Invitation For Bids (IFB) - 2026

## KARACHCHI PRADESIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman, Divisional Procurement Committee (Div PC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction / Building Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA)
4. Qualification requirements are indicated in section -5 ( Schedule) of the Bidding document.
5. Interested bidders may obtain further information from **The Chairman, Procurement Committee, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi (T.P No : 0212285761, Fax No : 0212285690, E-Mail:** kilinochchi1kps@gmail.com) and inspect the bidding documents at the address given below **from 08.05.2026 until 21.05.2026 During 9.00 am to 3.00 pm** on Normal Working Days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Procurement Committee, karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi,** from **08.05.2026 until 21.05.2026 from 9.00 am to 3.00 pm.** Upon payment of a non-refundable fee as mentioned in the below table. The method of payment will be **by cash.**
7. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Procurement Committee** ( Div PC) **Karachchi Pradeshiya sabha, A9 Road, Kilinochchi** on or before **10.00 am** on **22ND May 2026** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a "Bid-Security, as in the table below.
9. The pre-bid meeting will be held on **14.05.2026** at **03.00 pm** at the **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

**Table**

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | **From 2026.05.08-2026.05.21** |
| Pre – Bid Conference | **At 03.00 Pm on 2026.05.14** |
| Closing and Opening of Bid | **At 10.00 Am on 2026.05.22** |

| S.No | BID No. | Name of the Work | Source of Funds | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Valid up to | ICTAD Grade Required | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | PSDG/NP/KN/KPS/ 2026/CWS/01 | CONSTRUCTION OF WATER TANK AT PUNNAINEERAVI MARKET | PSDG | 2.627 | 40,000.00 | 05.08.2026 | C9 or Above (Building)) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |
| 2 | PSDG/NP/KN/KPS/ 2026/CWS/02 | CONSTRUCTION OF WATER TANK AT THARMAPURAM MARKET | PSDG | 2.627 | 40,000.00 | 05.08.2026 | C9 or Above (Building) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |
| 3 | SD/NP/KN/KPS/20 26/01 | RENOVATION OF AMBALKULAM 3RD CROSS ROAD | STAMP DUTY | 6.129 | 92,000.00 | 02.09.2026 | C8 or Above (Highways) | 06.08.2026 | 90 Days | 2,500.00 |
| 4 | NP/KN/KPS/2026/ PU-03/ C.W 02 | IMPROVEMENT OF 1ST ROAD SETRUKANDY MURASUMODDAI | COUNCIL | 2.54 | 38,000.00 | 05.08.2026 | C9 or Above (Highways) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |
| 5 | NP/KN/KPS/2026/ PU-03/ C.W 03 | IMPROVEMENT OF PATHTHARMODDAI ROAD KANDAWALAI | COUNCIL | 2.54 | 38,000.00 | 05.08.2026 | C9 or Above (Highways) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |
| 6 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 03 | IMPROVEMENT OF SCHOOL ROAD NAVINAPURAM AT PARAVIPANJAN. | COUNCIL | 3.389 | 51,000.00 | 05.08.2026 | C9 or Above (Highways) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |
| 7 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 04 | RECONSTRUCTION OF KANAKAMPIKAIKULAM MURUGAN KOVIL ROAD. | COUNCIL | 4.06 | 61,000.00 | 05.08.2026 | C8 or Above (Highways) | 09.07.2026 | 90 Days | 2,500.00 |
| 8 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 07 | RECONSTRUCTION OF AANANTHAPURAM EAST 3RD LANE AANANTHAPURAM | COUNCIL | 3.39 | 51,000.00 | 05.08.2026 | C9 or Above (Highways) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |
| 9 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 08 | IMPROVEMENT OF GNAVAIRAR ROAD THIRUNAGAR NORTH | COUNCIL | 3.39 | 51,000.00 | 05.08.2026 | C9 or Above (Highways) | 09.07.2027 | 90 Days | 2,000.00 |
| 10 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 09 | RECONSTRUCTION OF NAGATHAPIRAN 2ND CROSS LANE AT UTHIYANAGAR | COUNCIL | 2.54 | 38,000.00 | 05.08.2026 | C9 or Above (Highways) | 09.07.2026 | 90 Days | 2,000.00 |

Chairman,
Divisional Procurement Committee (Div PC)
Karachchi Pradesiya Sabha.

(C-5591)

08.05.2026


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# 200 சொகுசு பேருந்துகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் நெடுந்தூரப் பொதுப் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் 200 சொகுசுப் பேருந்துகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் தற்காலிக தலைமை நிர்வாக அதிகாரி சி.பி.ஏ. எம்.எம்.ஏ.என். தம்மிகா ரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான கொள்முதல் செயல்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, நீண்ட விடுமுறை நாட்கள் மற்றும் பண்டிகைக் காலங்களில் கொழும்பிலிருந்து தங்கள் சொந்த ஊர்களுக்குப் பயணம் செய்யும் மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்வதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பேருந்துகளில் சுமார் 170 பேருந்துகள் அதிவேக நெடுஞ்சாலைகளின் சேவைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளன.

மீதமுள்ள பேருந்துகள் கொழும்பிலிருந்து நாட்டின் தொலைதூர பகுதிகளுக்கான நெடுந்தூர சேவைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மின்சார பேருந்து சேவை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் தனியார் பேருந்து துறை எதிர்கொண்டுள்ள நிதி மற்றும் தொழில்நுட்ப நெருக்கடிகளுக்குத் தீர்வாக, மின்சார பேருந்து திட்டத்தை அறிமுகப்படுத்த இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், அம் கொட் கார்ப்பரேஷன் மற்றும் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றிற்கு இடையே நேற்று முன்தினம் கையெழுத்தானது.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் 100 சொகுசு மின்சார பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும். இவை 32 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்துகளாகும்.

ஆரம்ப கட்டத்தில் இந்தப் பேருந்து ஹொரண மற்றும் கொழும்புக்கு இடையிலான பாதையில் இயக்கப்படவுள்ளன. சூரிய சக்தியைப் பயன்படுத்தி இந்த பேருந்துகள் மின்னேற்றம் செய்யப்படவுள்ளன.

இதனை 45 நிமிடங்களில் முழுமையாக மின்னேற்றம் செய்ய முடியும். ஒருமுறை மின்னேற்றம் செய்தால் 350 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த பாதையில் சுமார் 200 மின்னேற்ற நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும், இந்த பேருந்துகளுக்கு 7 வருட உத்தரவாதம் வழங்கப்படுகிறது. (நி)

# பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் அதிகரிப்பு

## தீர்வு காண சர்வதேச உதவியை நாடுகிறது இலங்கை

(கொழும்பு)

பெண்களின் புகைப்படங்களைத் தவறாகப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சைபர் குற்றங்களைக் கண்டறியவும், அவற்றைத் தடுக்கவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு ஆகியன சர்வதேச தொழில்நுட்ப உதவியை நாடியுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கடந்த மூன்று ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் கணிசமாக அதிகரித்துள்ளதை உறுதிப்படுத்தினார்.

சமூக வலைத்தளங்களில் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களைத் தடுக்க அரசாங்கம் புதிய பொறிமுறைகளைக் கையாண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

Facebook மற்றும் Instagram நிறுவனங்களுடன் இணைந்து, பெண்களை இலக்கு வைக்கும் துஷ்பிரயோகப் பதிவுகளைக் கண்டறிந்து நீக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.


பெண்களின் படங்களைச் சிதைத்தல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் போன்ற குற்றங்களை முன்கூட்டியே கண்டறிய இது உதவும்.

பதிவாகும் குற்றங்களுடன் ஒப்பிடும்போது, அவை தீர்க்கப்படும் வேகம் மிகவும் குறைவாக இருப்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இதனாலேயே, நவீன தொழில்நுட்ப நுணுக்கங்களைக் கையாள்வதற்கும் குற்றவாளிகளை விரைவாகக் அடையாளம் காண்பதற்கும் சர்வதேச அமைப்புகளின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு அவசியமென அமைச்சர் சுட்டிக் காட்டினார். (நி)

# வாகன இலக்கத்தகடுகள் அச்சிடும் பணிகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டில் நீண்டகாலமாகத் தாமதமடைந்துள்ள வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் எதிர் வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.




இது தொடர்பாக அவர் மேலும் விளக்குகையில்,

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவதற்காக புதிய நிறுவனம் ஒன்றுக்கு விலை மனு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி அந்த நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அச்சிடும் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கமைய, ஜூன் மாதம் 10ஆம் திகதிக்குள் வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகளை அந்த நிறுவனத்தினால் மீள ஆரம்பிக்க முடியும் என பிரதி அமைச்சர் உறுதிப்படத் தெரிவித்தார். (நி)


# Invitation for Bids (IFB)
# Zonal Education Office-Vadamaradchy

[1] The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of Zonal Education office-Vadamaradchy now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below

| S. N | Bid No | Name of the Work | Estimated Civil Cost LKR In Mn Without VAT | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | NP/41/20/04/03/ 2026/PM/Works 01 | Construction of Dress Changing Room & Female Toilets J.Hartley College | 2.526Mn | C8 or above (Buildings) | 45,000.00 | 14.08.2026 | 56 |

[2] Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

[3] Interested eligible bidders may obtain further information from Zonal Director of Education Zonal Education office-Vadamaradchy [Email: acctvada@yahoo.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy, Ist Mile Post, Pointpedro.

[4] Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule/ Bidding Data" of the Procurement Document.

[5] A complete set of Procurement Documents in English language may be purchased by Interested bidders on the submission of a written request to the address Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy, 1st Mile Post, Pointpedro from 08.05.2026 until 22.05.2026 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of a **non-refundable fee of Three thousand, Rupees [Rs 3,000.00 < 10 Mn of Estimated Civil cost]. The method of payment will be by cash.**

[6] Bids must be delivered to the address Chairman,Regional Procurement Committee, Zonal Director of Education, Zonal Education office-Vadamaradchy, 1st Mile Post, Point Pedro on or before 22nd May 2026 and 15.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

[7] All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

[8] The pre-bid meeting will be held on 15.05.2026 at 10.30 Hrs at the Director's Education, Zonal Education office-Vadamaradchy Ist Mile Post, Pointpedro. The address (es) referred to above is (are): Chairman, Regional Procurement Committee, Zonal Education office-Vadamaradchy, Ist Mile Post, Point Pedro.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office-Vadamaradchy,**
**1 Mile Post, Pointpedro.**

(C-5537)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இணுவில்-மஞ்சத்தடி முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)


இணுவில் - மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் சுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும்.

தீர்த்தத் திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

தீர்த்தத் திருவிழா நிறைவெய்தியதும் பெரிய சந்நியாசிரியரின் திருவுருவப்படம் வீதி உலாவும் நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வரப் பூஜையும் இடம்பெற்று மாலை 6 மணிக்கு கொடியிறக்க நிகழ்வு நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

# அனலைதீவில் விசேட சுகாதார நிகழ்ச்சித் திட்டம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மற்றும் வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் நெறிப்படுத்தலில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அனலைதீவில் செயற்படுத்தப்பட்ட விசேட சுகாதார நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஒரு அங்கமாக அக்கிராமத்தில் உள்ள இரு ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் உயர் பாடசாலையான சதாசிவம் மகா வித்தியாலய மாணவர்களுக்கும் சுகாதார பணிமனையின் கோரிக்கைக்கு இணங்க சென் ஜோன் அம்புலன்ஸ் யாழ் மாவட்ட பிரிவினரால் முதல் உதவி பயிற்சி வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி த.சுசிதரன் தலைமையின் கீழ் முதலுதவிப் பயிற்சியினை சென் ஜோன் அம்புலன்ஸ் யாழ் மாவட்ட உதவி ஆணையாளரான சோ.ஈழநேசனும், அந் நிறுவனத்தின் சிரேஷ்ட முதல் உதவி பயிற்றுவிப்பாளரும், யாழ் மாவட்ட சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகருமான ந.பிரேம்குமாரும் வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச்சுகாதார உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்களும் மாணவர்களுடன் கலந்து கொண்டிருந்தனர். (8)

# தையிட்டி போராட்டக்காரர்களுக்கு எதிரான வழக்கு செப்ரெம்பர் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக பலாலி பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முன்கொண்டு செல்வதற்கு வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட வேலன் சுவாமிகள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் காணி உரிமையாளரும் போராட்டக்காரருமான ப.சாருஜன் உள்ளிட்டோருடன் பெயரிடப்பட்ட வலி வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் உள்ளிட்ட ஏனையோருக்கு எதிரான வழக்கு நேற்று வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் வழக்கினை முன்கொண்டு செல்ல ஏதுக்கள் காணப்படுகின்றன என்ற அப்படையில் வழக்குத் தொடுநர் வழக்கினை முன்கொண்டு செல்ல முடியும் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வழக்கில் குறிப்பிட்ட எதிராளிகளின் வாக்குமூலங்களை வழங்க பணிக்கப்பட்டதுடன் இவ்வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (8)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவ கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய 2026 ஆம் ஆண்டுக்கான பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு ஆரம்பகட்ட திட்டமிடல் கலந்துரையாடல் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.


ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வதால், இந்நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான மத மற்றும் சமூக நிகழ்வாகக் கருதப்படுகிறது.

இதனால், ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து, பாதுகாப்பான மற்றும் வசதியான சூழலை உருவாக்குவது மாவட்டச் செயலகம், தொடர்புடைய துறைகள் மற்றும் ஆலய நிர்வாக சபைக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கிய பொறுப்பாகும்.

கடந்த ஆண்டின் திருவிழாவில் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் விளக்கமாக முன்வைக்கப்பட்டதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு, போக்குவரத்து முகாமைத்துவம், கடைகள் ஒதுக்கீடு, மலசலகூட வசதிகள், குடிநீர் வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற முக்கிய அம்சங்கள் குறித்து விளக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலாளரால் ஒவ்வொரு துறை சார்ந்த பிரிவுகளின் தயார் நிலை தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அடுத்த கட்ட கலந்துரையாடல் 2026 மே மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு மேலதிகமாக போக்குவரத்து, திட்டமிடல், சேவை வசதிகள் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. (8)

# வீதியைப் புனரமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

பூநகரிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முக்கொம்பன் - நேரடம்பன் வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முக்கொம்பன் வீதியில் இருந்து நேரடம்பன் பகுதிக்குச் செல்லும் சுமார் மூன்று கிலோ மீற்றர் நீளமான மேற்படி வீதியானது இதுவரை தார் வீதியாக புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

இதனால் அங்கு வசிக்கின்ற பொதுமக்கள் மாரி காலத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

மேற்படி வீதியின் இருமருங்கும் வாய்க்கால் காணப்படுகின்ற நிலையில் அது நிறைந்து வீதியால் பயணிக்க முடியாத நிலைமை ஒவ்வொரு மாரி காலமும் ஏற்படுகிறது.

மேலும் வீதியானது சீரின்மையால் கிராம மக்கள் அவசர தேவைக்கு வைத்தியசாலைக்கு செல்வதற்கும் நீண்ட நேரம் செலவிட வேண்டி உள்ளது.

எனவே வீதியினுடைய மதவுகளை சீர்செய்து வீதியையும் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-30)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு!




(தருமபுரம்)

மக்கள் வங்கி கிளிநொச்சிக் கிளையினால் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த 4 ஆம் திகதி அன்று கிளிநொச்சி மகா வித்தியாலய வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கணிதப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற தெய்வேந்திரன் திருக்குமரனுக்கு 1,50,000 ரூபா பெறுமதியான காசோலையும், விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற ஆனந் கிருசோத் மற்றும் வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற கமலநாதன் மதுமினி ஆகியோருக்கு தலா 20,000 ரூபா பெறுமதியான காசோலைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வன்னிப் பிராந்திய மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் கமலநாதன் பிரதீப், கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர், வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர், பாடசாலையின் அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர். (8-316)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சுற்றுலா அபிவிருத்திக்காக பத்து இடங்கள் தெரிவு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையினை மேம்படுத்திடும் நோக்கில் வடமாகாண சுற்றுலா பணியகம் வவுனியா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஓர் கருத்தரங்கு ஆய்வினை நடாத்தியிருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் 71 சுற்றுலாத் தளங்கள் சிறந்த சுற்றுலா இடமாக பரிந்துரைக்கப்பட்டன. அதில் தற்போது பத்து இடங்கள் முதன்மை அடிப்டையில் சுற்றுலா அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட குறித்த இடங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஏதுவான விடயங்கள், அதன் சாதக, பாதகத் தன்மைகள், அபிப்பிராயங்கள் முதலான விடயங்களை மாவட்ட சுற்றுலா பங்குதாரர்களுடன் விரிவாக கலந்துரையாடும் நோக்கமாக குறித்த கருத்தரங்கு அமைந்திருந்தது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரண்டு ஆண்டுகளின் பின்

## டொலரின் பெறுமதி 324 ரூபாயைக் கடந்தது

### இலங்கையின் வெளிநாட்டு இருப்புக்கு பாரிய அச்சுறுத்தல்

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று முன்தினம் 324 ரூபாய் வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூபாயின் பெறுமதி இந்தளவுக்கு வீழ்ச்சியடைந்திருப்பது இதுவே முதல் முறையாகும். இது நாட்டின் பலவீனமான வெளிநாட்டு இருப்பு மற்றும் கடன் சுமை தொடர்பில் புதிய கவலைகளைத் தோற்றுவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 316.40 ரூபாயாகவும், விற்பனை விலை 324.03 ரூபாயாகவும் பதிவாகியிருந்தது.

உலக சந்தையில் நிலவும் தளம்பல் நிலை மற்றும் டொலருக்கான கேள்வி அதிகரித்துள்ளமையே இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

பொருளாதார நிபுணர் கலாநிதி கெனத் டி சில்வா இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், ரூபாயின் இந்த வீழ்ச்சியானது இலங்கையின் நிகர சர்வதேச முதலீட்டு நிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளார்.

அத்துடன், இலங்கையிடம் தற்போது 66.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளன. ஆனால், நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் டதிப்பு 16.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமேயாகும்.

இந்த நிலையில், ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடையும் போது, டொலர் அடிப்படையில் கடன் மாறாவிட்டாலும், உள்நாட்டு ரூபாய் அடிப்படையில் அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான செலவு சடுதியாக அதிகரிக்கும். இது நாட்டின் ஒட்டுமொத்த நிதி நிலைமையையும் மேலும் மோசமடையச் செய்யும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே அதிக வரிச் சுமை, மின்சாரம் மற்றும் எரிபொருள் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, இந்த ரூபாய் வீழ்ச்சி மேலதிக நெருக்கடியைக் கொடுக்கும் என கலாநிதி டி சில்வா எச்சரித்துள்ளார்.

இது போக்குவரத்து மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி, நாட்டின் நிதி நிலைமையை மேலும் இறுக்கமடையச் செய்யும். சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்கள் மூலம் இலங்கையின் வெளிநாட்டுத் துறை அண்மைக் காலங்களில் முன்னேற்றம் கண்டிருந்த போதிலும், இவ்வாறான நாணய வீழ்ச்சிகள் பொருளாதார மீட்சியில் பாரிய சவால்களைத் தோற்றுவித்துள்ளன. (நி)

## உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

(நெளுக்குளம்)

வவுனியா நீதிக்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பிலும், UNOPS / VRIDDHI Programme நிறுவனங்களின் நிதி உதவியுடனும், டித்வா புயலால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார நிலையை கருத்திற் கொண்டு மனிதாபிமான உதவித் திட்டமாக இவ் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் செட்டிக் குளம் பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நீதிக்கான மக்கள் அமைப்பின் பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-299)


# கரைச்சி பிரதேசசபை கிளிநொச்சி

தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல்-2026/2027

1. கரைச்சி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு சுத்திகரிப்பு சேவையினை (Cleaning Service) பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி- 2026.05.08-2026.05.22 மு.ப 11.00 மணிவரை**

   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி- 2026.05.25 மு.ப 11.00 மணிவரை**

   **கேள்வி திறக்கும் திகதி -2026.05.25 மு.ப 11.00 மணி வரை**

2. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சியில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 14.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனையும் மீளளிக்ககூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவத்தில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு "தலைவர், பெறுகைக் குழு, கரைச்சி பிரதேசசபை,கிளிநொச்சி" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி திறக்கப்படும் போது விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதார்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
7. **கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.**
8. **இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைச்சி பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.**
9. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சுத்திகரிப்பு சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|
| 02 | கிளி சேவைச்சந்தை, டிப்போ சந்தி, கிளிநொச்சி (மீன் பகுதி, மரக்கறிப் பகுதி , பழம்,வெற்றிலைப் பகுதி, பான்சி கடை-புறச்சூழல் சுத்திகரிப்பு) | 04 | 01.06.2026 - 31.05.2027 |

(C-5589)

தலைவர்
பெறுகைக்குழு,கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி. 2026.05.08



# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**39/3, கல்விளான் வீதி, வட்டாரம் -01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, கல்விளான் வீதியிலுள்ள இல:39/3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை சரவணமுத்து ஆறுமுகம் ஆகியவர் குறித்த ஆதனமானது தனது தந்தையான ஆறுமுகம் சரவணமுத்துக்கு அவரது முதுசம் வழிவந்த ஆதனம் என்பதுடன் அவரின் இறப்பின் பின்னர் அவரின் மகனான தான் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக ஆண்டனுபவித்து. தொடர்ச்சியாக தங்கு தடையற்ற ஆட்சியில் இருந்து வருவதாகவும் இவ் ஆதனம் தொடர்பான சகல ஆவணாங்கள் உறுதிகள் என்பன தொலைந்து காணாமல் போனமையாலும் குறித்த ஆதனத்திற்கு எதுவித உறுதியும் தற்போது கைவசம் இல்லையெனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு செல்வி சந்திரலிங்கம் கிருஸ்ணவேணி முகதாவில் 48/ 27.03.2010 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

சிவராசா மகேஸ்வரி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 136/16.01.2011ஆம் இலக்க உறுதியால் குறித்த சரவணமுத்து ஆறுமுகம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சரவணமுத்து ஆறுமுகம் பிரசித்த நொத்தாரிசு செல்வி.சந்திரலிங்கம் கிருஸ்ணவேணி முகதாவில் குறித்த 48ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்ததாகவும். குறித்த உறுதியின் ஆதன அட்டவ்ணையில் காணியானது நெல்பரப்பு என குறிப்பிடப்பட்டு சரியாக பதிவதற்கு பதிலாக தவறுதலாக நிலப்பரப்பு என எழுதப்பட்டு பதியப்பட்டமையால் குறித்த ஆதன அட்டவணையைத் திருத்தி நிலப்பரப்பு என பதியப்பட்டிருப்பதை நெல்பரப்பு என திருத்தி பிரசித்த நொத்தாரிசு செல்வி.சந்திரலிங்கம் கிருஸ்ணவேணி முகதாவில் 144/24.01.2011ஆம் இலக்கத்தில் பிழைதிருத்தல் பெலபித்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

சிவராசா விஜயகுமாரும் பெண் தமிழ்ச்செல்வியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 145/24.01.2011ஆம் இலக்க உறுதியால் குறித்த சரவணமுத்து ஆறுமுகம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

நாகரட்ணம் நிரோஜன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4497/01.12.2012ஆம் இலக்க உறுதியால் குறித்த சிவராசா விஜயகுமாரும் பெண் தமிழ்ச்செல்வியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சிவராசா விஜயகுமாரும் பெண் தமிழ்ச்செல்வியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4502/03.12.2012ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகரட்ணம் நிரோஜன் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

தெய்வேந்திரம் சுரேந்திரனும் பெண் கிருஸ்ணமாலாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6674/11.03.2014ஆம் இலக்க உறுதியால் குறித்த சிவராசா விஜயகுமாரும் பெண் தமிழ்ச்செல்வியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை அழியா நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:**
**பெயர் : "கொட்டையடி"**
**இறை :சுழிபுரம் இறை**
**விஸ்தீரணம்: நில.பர இலா 1**
**எல்லைகள்: கிழக்கு-மிகுதி ஆதனம், வடக்கு- சொக்கலிங்கம் ரவிக்குமாருக்கும் பெண் மதிக்குமுரிய ஆதனம், மேற்கு-கந்தையா வேலுப்பிள்ளையின் ஆதனம், தெற்கு- திருவடிநிலைப் பாடசாலையின் ஆதனம்**

குறித்த தெய்வேந்திரம் சுரேந்திரனும் பெண் கிருஸ்ணமாலாவும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தெய்வேந்திரம் சுரேந்திரனும் பெண் கிருஸ்ணமாலாவும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.


(7552)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விஜய் ஆட்சியமைக்க இடையூறாக இருக்க மாட்டோம்

### மு.க.ஸ்டாலின் பச்சைக் கொடி



(சென்னை)

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க திராவிட முன்னேற்றக் கழகம் எந்த வகையிலும் இடையூறாக அமையாது என அந்த கட்சியின் தலைவர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசியலமைப்பு நெருக்கடி அல்லது மற்றுமொரு தேர்தலை திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகிய நிலையில் மு.க ஸ்டாலின் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (நி)

## தென்கொரியாவுடன் இணையும் எண்ணமில்லை அரசமைப்புச் சட்டத்தை திருத்திய வடகொரியா



(பியாங்யாங்)

தென்கொரியாவுடன் இனி எக்காலத்திலும் இணையப் போவதில்லை என்ற கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், வடகொரியா தனது அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

கொரிய தீபகற்பத்தின் அங்கமான இவ்விரு நாடுகளும் தனித்தனி இறையாண்மை கொண்ட தேசங்கள் என்றும், தென்கொரியா தனது நாட்டின் 'முதன்மை எதிரி' என்றும் வடகொரிய ஜனாதிபதியா? கிம் ஜாங் உன் அறிவித்திருந்த நிலையில், தற்போது அது சட்டபூர்வமாக அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. வடகொரிய பாராளுமன்றமும் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னதாக, கொரிய தீபகற்பம் முழுவதும் ஒரே தேசமாகக் கருதப்பட்டு வந்த நிலையில், முதல்முறையாக தனது தெற்கு எல்லையை வடகொரியா தனித்து அடையாளப்படுத்தியுள்ளது.

இருப்பினும் கடல்சார் எல்லைகளில் நிலவும் சிக்கல்கள் காரணமாக, ஜப்பான் - கொரிய தீபகற்பம் இடையிலான மஞ்சள் கடல் பகுதியில் உள்ள சர்ச்சைக்குரிய எல்லைக்கோடுகள் குறித்து இதில் தெளிவான விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை.

இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் கிம் ஜாங் உன்னின் அதிகாரமும் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இனி அவரின் பதவி 'நாட்டின் தலைவர்' என மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம், சர்வதேச அளவில் வடகொரியாவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக அவர் அங்கீகரிக்கப்படுகிறார். பாதுகாப்பு தொடர்பான பிரிவில், வடகொரியா ஒரு 'பொறுப்புள்ள அணு ஆயுத நாடு' என்று விவரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் ஒட்டுமொத்த அணு ஆயுதப் படைகளையும் வழிநடத்தும் அதிகாரம் கிம் ஜாங் உன் வசம் மட்டுமே இருக்கும் என்பதும் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. (நி)

## பதவியேற்பு ஒ...



ஏனெனில், ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பதற்கு முன்பு, கட்சிக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதற்கான ஆவண ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆளுநர் ராஜேந்திர அர்லேகர் வலியுறுத்தியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால், நேற்று நடைபெறவிருந்த விஜயின் பதவியேற்பு விழாவானது ஒத்திவைக்கப்பட்டது.

திங்களன்று அறிவிக்கப்பட்ட 2026 தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகளில், ரி.வி.கே 108 இடங்களை வென்றது.

ஆனால், விஜய் போட்டியிட்டு வென்ற இரண்டு தொகுதிகளில் ஒன்றை அவர் காலி செய்ய வேண்டியிருப்பதால், அதன் மொத்த இடங்களின் எண்ணிக்கை நடைமுறையில் 107 ஆகவே உள்ளது.

இதன் விளைவாக உருவாகும் 233 உறுப்பினர்களைக் கொண்ட அவையில், பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களின் எண்ணிக்கை 117 ஆகிறது.

நேற்று முன்தினம் புதன்கிழமையன்று, காங்கிரஸ் கட்சி தனது ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவை வழங்கிய முடிவு, ஆரம்பத்தில் ரி.வி.கேவுக்கு ஒரு அரசியல் திருப்புமுனையாகத் தோன்றினாலும், பிற்காலத்தில் அது அக்கட் சிக்கான ஏனைய கதவுகளை மூடுவது போலத் தோன்றியது.

மதவாத சக்திகளையும்" மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளையும் விஜய் 'விலக்கி வைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் காங்கிரஸ் கட்சி முறைப்படி ஆதரவை வழங்கியது.

வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள், மாநிலங்களவைப் போட்டிகள் மற்றும் அடுத்த மக்களவைத் தேர்தல்களுக்கான பரந்த அரசியல் ஒருங்கிணைப்

பையு... ளடக்க... வித்த... புத... ரி.வி... முறை... தகவ... அதிமு... மைய... தினக... மூத்த... தலை... சாத்தி... விலக்... ளதாக...

இடை... மைய... பல ... கட்சிக... ளதாக... பத்திரி... கா... அரசு... கட்சிக...

## போர்நிறுத்த உடன்பாட்டை மீறி பெய்ரூட் மீது இஸ்ரேல் தாக்குதல்

### ஹிஸ்புல்லாவின் சிரேஷ்ட தளபதி கொல்லப்பட்டதாக அறிவிப்பு

(பெய்ரூட்)

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பிற்கு இடையே கடந்த மாதம் போர்நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்டதைத் தொடர்ந்து, முதன்முறையாக லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்ப் பகுதியில் இஸ்ரேல் நேற்று முன்தினம் புதன்கிழமை வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பின் அதிமுக்கியப் பிரிவான "ரத்வான்" படையின் தளபதி ஒருவரைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஆகியோர் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையேயான மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள சூழலில், பெய்ரூட் மீது இஸ்ரேல் நடத்தியுள்ள இந்தத் தாக்குதல் ஒட்டுமொத்த போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் முறிக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

வோஷிங்டனில் இரு நாட்டுத் தூதரக அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன.

இது குறித்து லெபனான் பிரதமர் சலாம், "நாங்கள் இஸ்ரேலுடன் உறவைச் சீராக்க விரும்பவில்லை, மாறாக அமைதியையே விரும்புகிறோம்.



எங்... லிய... கால... வதே... கை... ட்ரம்... மற்று... அவ... சந்தி... போ... உட... தாக... பின்... னா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...த்திவைப்பு!

**(சென்னை)............................ தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பதவியேற்கும் பாதையில், நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை எதிர்பாராதவிதமாக ஒரு தடை ஏற்பட்டது.**

...யையும் இந்தப் புரிந்துணர்வு உள்ளடக்கியுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

புதன்கிழமை காலை வரை ரி.வி.கே. இடைத்தரகர்களுடன் முறைசாரா ஆனால் தெளிவற்ற தகவல் தொடர்புகளைப் பேணிவந்த அதிமுக அன்புமணி ராமதாஸ் தலைமையிலான பாமக மற்றும் டி.வி. தினகரனின் அ.ம.மு.க ஆகியவற்றின் மூத்த தலைவர்கள், தற்போது விஜய் தலைமையிலான அரசை ஆதரிக்கும் சாத்தியக்கூறிலிருந்து தங்களை விலக்கிக்கொள்ளத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் - ரி.வி.கே இடையேயான புரிந்துணர்வு நிலைமையை அடியோடு மாற்றிவிட்டதாக, பல தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் வட்டாரங்கள் கூறியுள்ளதாக 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

காங்கிரஸின் ஆதரவுடன் ரி.வி.கே அரசு அமைவதற்கு கூட்டணிக் கட்சிகள் உதவக்கூடாது என 'டெல்லி' தெரிவித்ததாகத் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உள்வட்டாரங்களில் இருவர் குறிப்பிட்டுள்ளனர்.

இது விஜயை மேலும் நெருக்கடியான ஒரு கணக்குச் சிக்கலில் தள்ளியுள்ளது.

காங்கிரஸின் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்த போதிலும், அவருக்கு இன்னும் குறைந்தது ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவாவது தேவைப்படுகிறது.

நீடித்த இழுபறி, கட்சித் தாவல்களையோ அல்லது புதிய அரசியல் மறுசீரமைப்புகளையோ தூண்டிவிடக்கூடும் என்ற அச்சங்களுக்கு மத்தியில், அ.தி.முகவுக்குள் உள்ள சில பிரிவுகளும் மாற்றுவழிகளை மறுபரிசீலனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிலைப்படுத்தும் முயற்சிகள் தொடரும் நிலையில், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் இடதுசாரித் தலைவர்களுடன் தொடர்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

விஜயுடனான தனது சந்திப்பின் போது, அரசாங்கம் அமைப்பதற்கான எந்தவொரு கோரிக்கையும், குறைந்தபட்சம் 117 சட்டமன்ற உறுப் பினர்களின் ஆதரவை நிரூபிக்கும் பட்டியலுடன் இருக்க வேண்டும் என்று ஆளுநர் நேற்று முன்தினம் மாலை மீண்டும் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது. (நி)

---

# ஹார்முஸ் நீரிணையை உடனடியாகத் திறக்க வேண்டும்

## ஈரான் வெளிவிவகார அமைச்சரிடம் சீனா வலியுறுத்து



(பீஜிங்)

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடனான போருக்குப் பின்னர் முதன்முறையாகச் சீனாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்சியைச் சந்தித்துப் பேசிய சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ உலகளாவிய எண்ணெய் போக்குவரத்துக்கு முக்கியப் பாதையாக விளங்கும் "ஹார்முஸ் நீரிணையை" உடனடியாகத் திறக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பீஜிங்கில் நடைபெற்ற இருதரப்பு அவசரப் பேச்சுவார்த்தையின் போதே இந்த விவகாரம் முக்கியமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்கச் சீனா உதவத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ, "மத்திய கிழக்கில் நிலையானதொரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதே தற்போதைய அவசர முன்னுரிமையாகும். மீண்டும் மோதல்கள் வெடிப்பதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால், இருதரப்பும் தொடர்ந்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்," எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளும் விதித்துள்ள தடைகள் மற்றும் கடற்படை முற்றுகைகள் காரணமாக, உலகின் பெரும்பாலான மசகு எண்ணெய் கொண்டு செல்லப்படும் ஹார்முஸ் நீரிணை தற்போது முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. இது குறித்து சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ,


"ஹார்முஸ் நீரிணையில் பாதுகாப்பான மற்றும் இயல்பான கப்பல் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதில் சர்வதேச சமூகம் பெரும் அக்கறை கொண்டுள்ளது. எனவே, சர்வதேச சமூகத்தின் இந்த வலுவான கோரிக்கைக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் (ஈரான் மற்றும் அமெரிக்கா) உடனடியாகப் பதிலளிக்க வேண்டும் எனச் சீனா நம்புகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் ஆகியோருக்கு இடையே பீஜிங்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. இதில் ஹார்முஸ் நீரிணையைத் திறப்பது மற்றும் ஈரான் போர் விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆராயவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக ஈரான் அமைச்சருடன் சீனா நடத்தியுள்ள இந்தப் பேச்சுவார்த்தை சர்வதேச அளவில் உற்றுநோக்கப்படுகிறது. (நி)

---

...எங்கள் எல்லையிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறுவதற்கான கால அட்டவணையை வழங்குவதே எங்களது குறைந்தபட்ச கோரிக்கையாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் லெபனான் ஜனாதிபதி ஜோசப் அவுன் ஆகியோரை நேரில் சந்தித்துப் பேச அழைப்பு விடுத்துள்ள போதிலும், முறையான பாதுகாப்பு உடன்பாடும் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களும் நிறுத்தப்பட்ட பின்னரே அது சாத்தியம் என லெபனான் தரப்பு தெரிவித்துள்ளது. (நி)



---


# புதிய ஏவுகணையை அறிமுகப்படுத்திய துருக்கி

(அங்காரா)

இராணுவத் துறையில் அசுர வளர்ச்சி கண்டு வரும் துருக்கி, தற்போது 6,000 கி.மீ தொலைவில் உள்ள இலக்குகளை துல்லியமாக தாக்கும் கண்டம் விட்டு கண்டம் பாயும் புதிய ஏவுகணையை அறிமுகப்படுத்தி உலக நாடுகளை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

மேற்காசிய நாடான துருக்கியின் இஸ்தான்புல் நகரில் "சஹா-2026" என்ற பெயரில் சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்த ஏவுகணை ஒலியை விட 25 மடங்கு வேகத்திலும், 3,000 கிலோ



வெடிபொருட்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது. திரவ எரிபொருளில் இயங்கும் 4 ராக்கெட் என்ஜின்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானம் தயாரிப்பில் கொடிகட்டிப் பறக்கும் துருக்கி, தற்போது 6,000 கி.மீ தூரம் வரை பாயும் ஏவுகணையை உருவாக்கி, தன் இராணுவ [illegible] (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரணி நாகபூசணி அம்பாள் புகழ்பாடும் "அஞ்சுதலை குடைக்காரி" இறுவட்டு வெளியீடு



(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாளின் 2026 மகோற்சவத்தை முன்னிட்டு பூங்காவனத் திருவிழாவில் அம்பாள் புகழ்பாடும் "அஞ்சு தலை குடைக்காரி" எனும் இசை இறுவட்டு வெளியீடு செய்து வைக்கப் பட்டது.

ஆதி கிரியேஷன்ஸ் ஆதிராவின் தயாரிப்பில் உருவாகியுள்ள பாடல்களை ஈழத்துக்கவிஞர் சிவானந்தன் றஜித் எழுத, பாடல்களுக்கு இசைவடிவம் கொடுத்திருக்கிறார் அருணா கேதீஸ்.

பாடல்களுக்கு குரல் வடிவம் கொடுத்து பாடியிருக்கிறார்கள் மகாலிங்கம் தயாபரன், முரளிதர சர்மா, சகானா, தில்லைராஜ் அபிநயன்.

ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட அரங்கத்தில் ஆலய பிரதம குருக்கள், ஆலய தர்மகர்த்தா சபை, இந்து இளைஞர் மன்றத்தினர் பாடலாசிரியர் றஜித் இணைந்து "அஞ்சு தலை குடைக்காரி" இறுவட்டு வெளியிடப்பட்டு பாடலும் ஒலிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1995- இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>7இல்செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L, Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16864 | பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>தகைமை/தொழில்: College, English Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16880 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி-பா: 28 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L, Director<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16865 | பிறப்பு: 1993-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>7இல்செவ்<br>கி-பா: 49<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBM, BEd, MEd, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16882 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி-பா: 36<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில்:Diploma, Data Management<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16866 | பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc, MSc, London<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16883 |
| பிறப்பு: 1985- இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: MSc, MBA, London<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16867 | பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>1இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA, MA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16886 |
| பிறப்பு: 1989- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி-பா: 26 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: A/L,நகைத்தொழில்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16869 | பிறப்பு: 1998 - இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>4இல்சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு : வெளிநாடு<br>தொ.இ: G/16887 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 590



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கனவும் விழிப்பும்!

ஒரு ஆள் இருந்தான். அவனாலே தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

அதனால் என்ன செய்தான். ஒரு நாள் இரவு மெதுவாக எழுந்தான் வீட்டைத் திறந்து வெளியிலே வந்துவிட்டான்.

மனைவி, ஒரு மகன் இவங்க இரண்டு பேரையும் விட்டுவிட்டுப் போய்விட்டான்.

அந்த பிள்ளைக்கு அப்பா மேலே ரொம்ப பாசம்.

அதனால் தந்தையின் பிரிவை அவனாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஏங்கி ஏங்கி... ஒருநாள் அவன் இறந்துப் போய்விட்டான்.

வீட்டை விட்டு வெளியே போன அப்பா என்னன்னவோ செய்து கொஞ்சம் பணம் சம்பாதித்தான். பணம் சம்பாதித்தவுடனே வீட்டுக்குத் திரும்பலாம் என்ற நினைப்பு வந்தது.

பணத்தோடு தன்னுடைய கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறான். வழியிலே மழை பிடித்துக் கொண்டது. கடுமையான மழை! அதனாலே என்ன செய்தான். அங்கேயிருந்த ஒரு சத்திரத்திலே தங்கினான். இரவு தூக்கத்திலே ஒரு கனவு அந்தக் கனவிலே, அவன் ஒரு பெரிய ராஜா, தங்க சிம்மாசனத்திலே உட்கார்ந்திருக்கிறான். சுற்றி, ஏராளமான சேவகர்கள்.

என்ன வேண்டும் என்றாலும் செய்வதற்குத் தயராக இருக்கிறார்கள்

அந்த ராஜாவுக்கு ஆறு குமாரர்கள். எல்லோருமே இளவரசர் கோலத்திலே ஆடம்பரமாக இருக்கிறார்கள். ஆனந்தமாக இருக்கிறார்கள். அருமையான கனவு.. எந்தக் கவலையும் இல்லாமல் இவன் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறான். இந்த சமயத்திலே திடீர் என்று ஒரு பெரிய இடி முழக்கம்! இவன் முழித்துக் கொண்டான். கனவு கலைந்து விட்டுது.

கண்ணைத் திறந்து பார்க்கிறான். ஒன்றையும் காணவில்லை...

"ஐயோ.. என்ன இது - இது வரைக்கும் நான் படுத்திருந்த ஹம்ஸதூளிகா மஞ்சம் எங்கே போனது? நான் பெரிய மகாராஜாவாக இருந்தேனே. அந்தப் பதவி எங்கே போனது? எனக்கு சேவை செய்து கொண்டிருந்த பணியாளர்கள் எல்லாம் எங்கே போனார்கள்?" என்று யோசனை செய்தான்.

பக்கத்திலே இருந்தவர்களை விசாரித்தான். அவர்களும் படுக்கையிலேயிருந்து எழுந்து உட்கார்ந்து "ஏதாவது கனவு கண்டிருப்பாய்!" - என்றார்கள். எல்லாம் கனவு என்று புரிந்ததும் அவனுக்கு ஏமாற்றமாய்ப் போனது! ஆறு அரச குமாரர்களையும் காணவில்லை என்பதிலே அவனுக்கு ரொம்ப வருத்தம். இருந்தாலும் என்ன செய்வது? காலையில் எழுந்தான். வீட்டுக்குப் போய் சேர்ந்தான். இவனைப் பார்த்ததும் மனைவிக்கு ரொம்ப மகிழ்ச்சி அதே நேரம் மகனை நினைத்து அழுகை! "எங்கே நம்ம பிள்ளை?" என்று கேட்டான். "உங்கள் பிரிவு தாங்காமல் இறந்து போய்விட்டான்!" என்றாள். அதைக் கேட்டதும் இவனுக்கு அழுகை வரவில்லை...

அப்படியே சிலை மாதிரி நின்றான்! மனைவிக்கு இது வியப்பாக இருந்தது. "என்னங்க இது? நம் பிள்ளை மேலே எவ்வளவோ பாசம் அன்பு வைத்திருந்தீர்கள்.

இப்படி நிற்கிறீர்களே.. அது எப்படி முடியுது உங்களால்?" - என்று கேட்டார் அந்த அம்மா.

அதுக்கு இவன் சொல்கிறான்: நேற்று இரவு நான் ஒரு சத்திரத்திலே தங்கியிருந்தேன். அங்கே ஒரு பெரிய கனவு கண்டேன். அந்தக் கனவிலே நான் ஒரு அரசன். ஹம்சதூளிகா மஞ்சத்துலே படுத்திருந்தேன். என்னைச் சுற்றி ஏகப்பட்ட பணியாளர்கள். அங்கே எனக்கு ஆறு குமாரர்கள். கண்விழித்துப் பார்க்கும்போது அவர்கள் யாருமே இல்லை! இப்போது நான் கனவிலே வந்த போன அந்த ஆறு குமாரர்களுக்காக அழுவதா? இல்லை இங்கே வந்து போன இந்த ஒரு மகனுக்காக அழுவதா? அவர்கள் கன்விலே வந்த குமாரர்கள், இவன் விழிப்பு நிலையிலே வந்த குமாரன். விழிப்பு நிலையிலே கனவு கிடையாது. கனவிலே விழிப்பு நிலை கிடையாது. ஆனால் இரண்டிலும் நான் இருக்கிறேன்!

இந்த உண்மையை ஒரு பெரியவர் (சத்ய சாய்பாபா) அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இதை முழுதாக புரிந்து கொண்டால் வாழ்க்கை நமக்கு ஒரு ஆனந்தம்தான்! ஆனால் நம்மிலே பலபேர் இந்த உண்மையை சரியாக புரிந்து கொள்வது இல்லை! இவர்கள் எல்லாம் கனவையே வாழ்க்கையாக நின்னக்கிறவர்கள். ஒருவனுக்கு தூக்கத்திலே நடக்கின்ற வியாதி.

டாக்டர்கிட்டே போனான். மருந்து சாப்பிட்டான். கொஞ்சநாள் கழித்து டாக்டர் கேட்டார். "ஏம்பா என்னிடம் வைத்தியம் செய்து கொண்டாயே எப்படி இருக்கு. ஏதாவது "இம்ப்ரூவமென்ட்" தெரியுதா?" என்றார்.

"நல்ல இம்ப்ரூவ்மென்ட்" என்றான் அவன். "எப்படி" என்று கேட்டார். "முன்பெல்லாம் தூக்கத்திலே 10 அடிதூரம் நடப்பேன்- இப்போதெல்லாம் 100 அடி தூரம் வரைக்கும் போய்விட்டு வருகிறேன்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கால்நடைகள் திருட்டு வாழ்வாதாரம் பாதிப்பு!

## கால்நடை உரிமையாளர்கள் கவலை

**(தருமபுரம்) ......................**

**கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் இரவு வேளைகளில் கால்நடைகளின் திருட்டு அதிகரித்து காணப்படுவதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவது, தருமபுரம் பகுதியில் கடந்த ஒரு மாதத்திற்குள் 10 இற்கும் அதிகமான பசு மாடுகள் இரவு நேரங்களிலும் பகல் வேளைகளிலும் மேய்ச்சலுக்காக விடப் பட்ட நிலையில் காணாமல் போயுள் ளன.

வாழ்வாதாரத்திற்கா வழங்கப்பட்டு வந்த பசு மாடு ஒன்று கன்று ஈன்று மூன்று மாதம் ஆன நிலையில் மேய்ச்ச லுக்காக கட்டி விடப்பட்டிருந்த நிலையில் தற்போது காணாமல் போயுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக தருமபுர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றிணையும் கால்நடையுரிமை யாளர் பதிவு செய்துள்ளார்.

அத்துடன் கால்நடைகளை நம்பியே தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் களவாடப்பட்ட பசுவின் 3 மாதமான கன்று பெரிதும் அந்தரித்து வருவதாகவும் கடையில் பால் பக்கேட் டினை கொள்வனவு செய்து அந்தக் கன்றுக்கு வழங்கி வருவதாகவும் தெரி வித்துள்ளார்.

எனவே குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய தீர்வி னைப் பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (8-316)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

விளைவேலி ஆதீனம் சாவகச்சேரி- நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள் மிகு வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி, வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெற்று அன் றையதினம் இரவு 7 மணிக்கு கொடி யிறக்க நிகழ்வும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

# தையல் இயந்திரம் வழங்கி வைப்பு!

(நெளுக்குளம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவ ருக்கு வாழ்வதார உதவியாக தையல் இயந்திரம் ஒன்று கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் இயங்கும் அக்கினி பெண்கள் அமைப்பின் நிதி அனுசர ணையில் குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 150 | 300 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 150 | -- | 200 | -- | 300 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 100 | 150 | 150 | 120 |
| தக்காளி | 300 | 220 | 250 | 180 | 300 | 280 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 170 | 200 | 140 | 200 | 200 | 110 |
| கோவா | 300 | 130 | 150 | 130 | 200 | 160 | 140 |
| கரட் | 250 | 350 | 400 | 280 | 400 | 350 | 320 |
| பூசணி | 100 | 100 | 100 | 80 | 100 | 70 | 50 |
| புடோல் | 200 | 180 | 150 | 150 | 300 | 180 | 220 |
| வாழைக்காய் | 120 | 70 | 100 | 80 | 100 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 250 | 400 | -- | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | -- | 200 | 170 | -- |
| பாகற்காய் | 700 | 500 | 600 | 500 | 400 | 600 | 550 |
| வெண்டக்காய் | 300 | 150 | 200 | 100 | 250 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 400 | 300 | 300 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 300 | 150 | 250 | 100 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 250 | 300 | 300 | 260 |
| பீற்றூட் | 200 | 150 | 150 | 100 | 300 | 240 | 200 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 100 | 300 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 700 | 1000 | 700 | 600 |
| போஞ்சி | 600 | 600 | 800 | 500 | 600 | 600 | 650 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 150 | -- | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 140 | 40-120 | 150 | 150 | 120 | -- | 110 |
| தேசிக்காய் | 450 | 450 | 600 | 700 | 400 | 500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 140 | 150 | 120 | 80-130 | -- | 90 |
| இராசவள்ளி | 300 | 450 | 400 | 350 | 300 | -- | 350 |
| வெங்காயப்பூ | 450 | 600 | 1000 | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 180 | 200 | 90 | 300 | -- | 100 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | -- | 80 | -- | 60 |
| ஈரப்பலா | 80 | -- | 200 | -- | -- | -- | 100 |

# இராசிபலன்

08.05.2026
சித்திரை 25, வெள்ளிக்கிழமை
சஷ்டி முற்பகல் 9.28 மணிவரை
உத்தராடம் முன்னிரவு -6.29 மணிவரை

சுப நேரம் -5.55-7.25 மணிவரை
இராகு காலம் -10.25-11.55 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவாதிரை,புநர்பூசம்

வளவன்

**மேஷம்** - கனவுப் பலிதமுண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு,போசன சுகமுண்டு.

**கடகம்** - உறவினர் நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** - பெற்றோர் வழியில் பிரியம் கூடும், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மகரம்** - வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கற்பனை மிகுதியான நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**ரிஷபம்** - இனத்தவர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** - நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** - உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** - தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், ஆன்மீக சிந்தனைகள் மேலோங்கும் நாள், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**மிதுனம்** - சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், திடீர் விரயங்கள் ஏற்படலாம்.

**கன்னி** - வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**தனுசு** - சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மீனம்** - அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக நடக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

தீய எண்ணங்களை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1039





## 11ஆம் அத்தியாயம் மண்டபம் விழுந்தது

ஆனால் பழுவேட்டரையர் அத்துடன் நின்றுவிட விரும்பவில்லை. அன்றிரவு முழுவதும் அந்தக் காட்டில் அலைந்து திரியும்படி நேர்ந்தாலும் அந்தத் தேவராளனையும், அவன் தேடிப் போகும் மந்திரவாதி ரவிதாஸனையும் பிடித்தே தீருவது என்று தீர்மானித்துக் கொண்டு, காட்டுப் புதர்களில் வழி கண்ட இடத்தில் நுழைந்து சென்றார். ஒரு ஜாம நேரம் காட்டுக்குள் அலைந்த பிறகு சற்றுத் தூரத்தில் வெளிச்சம் ஒன்று தெரிவதைப் பார்த்தார். அந்த வெளிச்சம் நின்ற இடத்தில் நில்லாமல் போய்க் கொண்டிருந்தபடியால் அது வழி கண்டுபிடிப்பதற்காக யாரோ கையில் எடுத்துச் செல்லும் சுளுந்தின் வெளிச்சமாகவே இருக்க வேண்டும் என்பது தெரிந்தது.

அந்த வெளிச்சத்தைக் குறி வைத்துக் கொண்டு வெகு விரைவாக நடந்தார். வெளிச்சத்தை நெருங்கிச் சென்று கொண்டிருந்தார். கடைசியாக, அந்தச் சுளுந்து வெளிச்சம் காட்டின் நடுவே ஒரு பாழடைந்த மண்டபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுபோல் காட்டிவிட்டு உடனே மறைந்தது.

அந்த மண்டபம் திருப்புறம்பியத்திலுள்ள பிருதிவீபதியின் பள்ளிப்படைக் கோவில் தான் என்பதைப் பழுவேட்டரையர் பார்த்த உடனே தெரிந்துகொண்டார். பள்ளிப்படையை நெருங்கி ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக நின்றுகாது கொடுத்துக் கேட்டார்.

ஆமாம் அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. இரண்டு பேர் பேசிகொண்டிருந்தது கேட்டது. உரத்த குரலில் பேசிய படியால் பேசியது தெளிவாகக் கேட்டது.

"மந்திரவாதி! உன்னை எத்தனை நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன், தெரியுமா? நீ ஒருவேளை வர முடியாமற் போய் விட்டதோ, அல்லது உன்னையுந்தான் யமன் கொண்டு போய் விட்டானோ என்று பயந்து போனேன்!" என்றான் தேவராளன்.

மந்திரவாதி ரவிதாஸன் கடகட வென்று சிரித்தான். "யமன் என்னிடம் ஏன் வருகிறான்? சுந்தர சோழனையும், அவனுடைய இரண்டு பிள்ளைகளையும்தான் யமன் நெருங்கிக் கொண்டிருக்கிறான். நாளைய தினம் அவர்களுடைய வாழ்நாள் முடிந்துவிடும்!" என்றான் மந்திரவாதி.

அச்சமயம் வானத்தையும் பூமியையும் பிரகாசப்படுத்திக் கொண்டு மின்னல் ஒன்று மின்னியது.

மின்னல் வெளிச்சத்தில், அங்கே நின்று பேசியவர்கள் இருவருடைய தோற்றங்களையும் பழுவேட்டரையர் ஒரு கணம் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

அவர்களில் ஒருவனாகிய ரவிதாஸனை இரண்டொரு தடவை அவர் தமது அரண்மனையிலேயே பார்த்ததுண்டு. அவன் மந்திரவித்தைகளில் தேர்ந்தவன் என்று நந்தினி கூறியதுண்டு. அவருடைய சகோதரன் காலாந்தக கண்டன் இந்த மந்திரவாதியைப் பற்றியே தான் சந்தேகப்பட்டு அவரை எச்சரித்திருக்கிறான்.

இன்னொருவன், கடம்பூர் அரண்மனையில் வேலனாட்டம் ஆடிய தேவராளன். அவனைத் தாம் பார்த்தது அதுதானா முதல் தடவை? அவனுடைய உண்மைப் பெயர் என்ன? அப்படியும் ஒரு வேளை இருக்க முடியுமா?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பு மணியின் அப்பா



மகாதேவ முதலியாரின் மாடிவீடு, அந்த வட்டாரத்திலேயே அழகானது. ஆனால், மிகப் பெரிய வீடல்ல. மாடி வீட்டிற்கு முன்புறம் ஒரு சிறிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தைச் சுற்றிச் சுவர் இருந்தது. மகாதேவருக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் அன்புமணி.

தீபாவளிக்கு முதல்நாள் மாலை, மகாதேவரின் வீட்டின் முன்பாக ஏழைச் சிறுவர்களும், சிறுமிகளும் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள், அந்த மாடி வீட்டிற்குச் சிறிது தூரத்திலிருக்கும் குடிசைகளிலே வசிப்பவர்கள். அவர்கள் தங்களுக்குள் எதைப் பற்றியோ பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டுமிருந்தனர். அப்போது உள்ளேயிருந்து அன்புமணி வெளியே வந்தான்.

"ஒரே குதூகலமாக இருக்கிறீர்களே! கொஞ்சம் பொறுத்திருங்கள். அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்" என்றான்.

மறு நிமிஷமே கார் வரும் சப்தம் கேட்டது. சப்தம் வந்த திசையை எல்லோரும் ஆவலோடு பார்த்தார்கள்.

மாடி வீட்டின் முன்னால் வந்ததும், கார் நின்றது. உள்ளேயிருந்து மகாதேவர் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் ஏழைப் பிள்ளைகள் எழுந்து ஒதுங்கி நின்றனர். மகாதேவர் வீட்டிற்குள் நுழைந்தார். டிரைவர் காரிலிருந்து சீன வெடிகளும் மத்தாப்பூ பெட்டிகளும் கம்பி வாணங்களும் கொண்டு வந்து வீட்டின் முன்புறத்தில் உள்ள திண்ணையில் வைத்தான். ஒரு பட்டாசுக் கடையே வைத்து விடலாம். அந்த அளவுக்கு அங்கே பட்டாசுகள் இருந்தன.

ஏழைப் பிள்ளைகள் அவற்றை ஆவலோடு பார்த்தார்கள். உள்ளே சென்ற மகாதேவர் சிறிது நேரத்திற்குப் பின் வெளியே வந்தார். திண்ணையில் உட்கார்ந்தார். அன்புமணியும் பக்கத்திலே நின்றான். அவர்கள் அருகிலே இருந்த வேலையாள் பட்டாசுக் கட்டுக்களைப் பிரித்து வைத்தான்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கடவுள் நாஸ்திகத்தை ஏற்பான் அதர்மத்தை ஒருபோதும் ஏற்கான்

நாஸ்திகம் என்பது கடவுள் மறுப்புக் கொள்கையை உடையது.

அதரவது கடவுள் இல்லை என்ற நிலைப்பாட்டை உடையவர்களை நாஸ்திகர்கள் என்பர்.

இங்கு கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையுடைய ஆஸ்திகர்களை எந்தளவு தூரம் கடவுள் நேசிக்கின்றாரோ அந்தளவு தூரம் கடவுள் இல்லை என்ற கொள்கையுடையவர்களையும் கடவுள் நேசிக்கின்றான்.

ஆக, இங்கு அறத்தின் பாற்பட்டே கடவுளின் தீர்ப்பு அமைகிறது.

ஆம், கடவுள் ஒருபோதும் மனிதன் தன்னை வழிபட வேண்டும் என்று கட்டளையிட்டது கிடையாது.

ஆனால், மனிதன் மனுதர்மத்தைப் பின்பற்ற வேண்டும். புண்ணியம் – பாவம் எனும் நல்வினை – தீவினைப் பயனை உணர்ந்து மனித வாழ்வில் அறத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதுதான் இறைக்கொள்கை.

ஆம், நாஸ்திகனாக இருப்பதும் ஆஸ்திகனுக்கு அவலத்தை ஏற்படுத்துவதும் ஒன்றல்ல.

அதாவது, நாஸ்திகராக இருப்பதும் ஆஸ்திகராக இருப்பதும் அவரவர் விருப்பமும் கொள்கையுமாகும்.

இங்கு ஆஸ்திகனுக்கு எதிராக நாஸ்திகரோ, நாஸ்திகருக்கு எதிராக ஆஸ்திகரோ தீங்கிழைப்பது அறத்தின்பாற்பட்டதன்று.

உண்மை. அறத்தின் பாற்படாததை இறைவன் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டான்.

ஆக, அறத்தைப்பின்பற்றி கடவுளுக்கு நன்றியுடையவர்களாக நாம் இருக்க வேண்டும். இங்குதான் **“அறம்”** பற்றி பலரும் கருசனை கொள்ளாமல் இருக்கின்றனர்.

உதாரணத்துக்கு தமிழகத்தை ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழகம் கடவுள் மறுப்புக் கொள்கை கொண்டதாகத் தன்னைக் காட்டிக் கொண்டது.

அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி என்ற வரிசையில் மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் வரை தங்களைக் கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களாகக் காட்டிக் கொண்டனர்.

ஆயினும் மு.க.ஸ்டாலின், அவரது மகன் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கடவுள் மறுப்புக் கொள்கையை இந்து மத எதிர்ப்பாக – சனாதன தர்மத்துக்கு விரோதமாகச் செயற்படுவது எனப் பொருள்படுத்திக் கொண்டனர்.

அதேநேரம் ஏனைய சமயங்களுக்கு அவர்கள் உயர் மதிப்புக் கொடுத்ததுடன் அச்சமயங்கள் மீது நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

இங்குதான் நாஸ்திகம் விலகி அதர்மம் வெளிப்படுகிறது. ஆம், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவதைத் தடுத்து முருக பக்தர்களை வேதனைப்படுத்திய மு.க.ஸ்டாலின் இப்போது தன் சொந்தத் தொகுதியிலேயே தோற்று, ஒரு முதலமைச்சராக இருந்த ஒருவர் தன் தொகுதியில் தோற்ற வரலாற்றைத் தனதாக்கியுள்ளார்.

இதுதான் அதர்மத்துக்கான கடவுளின் பாடமும் படிப்பினையுமாகும்.

# இணையம் ஊடாக நிதி மோசடி
# 30 வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

வெலிசர இடைத்தங்கல் முகாமிலிருந்து தப்பியோடி இணையம் ஊடாக சட்டவிரோத நிதி மோசடிகளில் ஈடுபட்டு வந்த 30 வெளிநாட்டவர்களை பொலிஸார் நேற்று (07) கைது செய்துள்ளனர்.

கொழும்பு பொரலஸ்கமுவ, 10ஆம் மைல் கல் பகுதியில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடமொன்றில் தங்கியிருந்த போதே, கல்கிஸ்ஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்களில் இரண்டு யுவதிகள் உட்பட 21 சீனர்கள் மற்றும் ஒரு யுவதி உட்பட 9 வியட்நாமியர்கள் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 10 கணினிகள், 29 ஆப்பிள் வகை அலைபேசிகள் மற்றும் இணைய வசதிகளைப் பெறுவதற்கான உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேபோன்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் 152 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள இந்த 30 பேரும் உள்ளடங்கியிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் வெலிசர இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதே, அங்கிருந்து தப்பிச் சென்று மீண்டும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட நிலையில் இவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸ்ஸை பிராந்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பொரலஸ்கமுவப் பகுதியிலுள்ள இருமாடிக் கட்டிடத்தின் மேல் தளத்தை மாதந்தோறும் 15 இலட்சம் ரூபாய் வாடகைக்கு எடுத்து இவர்கள் இந்த மோசடியை முன்னெடுத்து வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியுடன் நடத்தப்பட்ட விசாரணையில் இவர்கள் சில நாட்களுக்கு முன்னரே இந்தப் பகுதிக்கு வந்துள்ளமை கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் எவரிடமும் விசா அல்லது கடவுச்சீட்டுகள் இருக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின்
## முன்னாள் நிறைவேற்று அதிகாரியை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இரண்டு நாட்களுக்கு முன்னர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதி பிணை நிபந்தனைகளை மீறியுள்ளார் என்ற அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு பிரதான நீதிபதி அசங்க எஸ். போதரகம நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

விமான நிறுவனத்திற்காக ஏர்பஸ் விமானங்களைக் கொள்முதல் செய்தபோது இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மார்ச் 12 அன்று கைது செய்யப்பட்ட சந்திரசேனாவுக்கு, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை (5) பிணை வழங்கியது.

அதன்படி ஏர்பஸ் விமான ஒப்பந்தம் தொடர்பாக 2 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## பிரித்தானிய பிரஜை இலங்கையில் கைது

(கொழும்பு)

ஹபராதுவ பொலிஸ் பிரிவின் உனவட்டுன பகுதியில் பிரித்தானிய நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

280 கிராம் மற்றும் 150 மில்லிகிராம் கொக்கைன் போதைப்பொருளுடன் குறித்த பிரித்தானிய நாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்றுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் அதிரடிச் சோதனை நடத்தி அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 72 வயதான பிரித்தானிய நாட்டவர் எனத் தெரியவந்துள்ளது. (ம-7)

## புதையல் தோண்டிய இருவர் கந்தளாயில் கைது

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஸ் சந்திப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் இரகசியமான முறையில் புதையல் தோண்டிய இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கந்தளாய், 91ஆம் கட்டை போகஸ் சந்தி பகுதியிலேயே இந்தச் சட்டவிரோத புதையல் அகழ்வு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் புதையல் தோண்டப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது குறித்த வீட்டிற்குள் சுமார் 5 அடி ஆழமான குழி தோண்டப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-7)

## மட்டக்களப்பில்
## வாவியில் மிதந்த நிலையில் இரு சடலங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் அடையாளம் தெரியாத இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று (07) மாலை மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சின்ன உப்போடைப் பகுதியில் உள்ள வாவியில் இரண்டு சடலங்கள் மிதந்த நிலையில் கரை ஒதுங்கியிருப்பதை நேற்று மாலை 5.00 மணியளவில் அவதானித்த பொது மக்கள் இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் தடயவியல் பிரிவு அதிகாரிகளும் நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட இரு ஆண்களின் சடலங்களையும் மீட்டனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெரும்பான்மையை பேரவையில் தான் நிரூபிக்க வேண்டும்: ராஜ்பவனில் அல்ல

## கமல்ஹாசன் காட்டம்



(சென்னை)

தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளின் பின்னர் ஆட்சி அமைப்பதில் நிலவி வரும் இழுபறி நிலை குறித்து, மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கமல்ஹாசன் தனது "எக்ஸ்" தளத்தில் காட்டமான பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

தமிழக வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், எந்தவொரு தனிப்பட்ட கட்சிக்கும் மக்கள் முழுமையான அதிகாரத்தை வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், தற்போதைய சூழலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அரசியல் முதிர்ச்சியைப் பாராட்டியுள்ளார். "மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம், பொறுப்பான எதிர்க்கட்சியாகச் செயற்படுவோம்" என்ற ஸ்டாலினின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் வெற்றி பெற்றுள்ள நிலையில், அவரை ஆட்சி அமைக்க அழைக்காமல் இருப்பது தமிழ் நாட்டு மக்களின் தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும் என கமல்ஹாசன் சாடியுள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட 233 உறுப்பினர்கள் இன்னும் பதவியேற்க முடியாமல் இருப்பது மாநிலத்திற்கு நேரும் அவமானம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரபலமான "எஸ்.ஆர். பொம்மை" வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டியுள்ள அவர், "ஒரு கட்சிக்கு பெரும்பான்மை இருக்கிறதா இல்லையா என்பதைச் சட்ட மன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டுமே தவிர, ஆளுநர் மாளிகையில் (ராஜ்பவன்) அல்ல" என உச்சநீதிமன்றம் தெளிவாகக் கூறியுள்ளதை நினைவூட்டியுள்ளார். இது வெறும் கட்சி அரசியல் அல்ல, ஒரு இந்தியக் குடிமகனின் கொள்கைக் குரல் என்று குறிப்பிட்டுள்ள கமல்ஹாசன், தமிழ் நாட்டு மக்களின் தீர்ப்புக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும் எனத் தனது பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் புதிய அரசு அமைவதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் குறித்து தேசிய அளவில் கவனம் ஈர்க்கும் வகையில் கமல்ஹாசனின் இந்தப் பதிவு அமைந்துள்ளது. (நி)

## பெரும்பான்மை பலத்தை நிரூபியுங்கள்

# இரண்டாவது நாளாகவும் விஜய்யை திருப்பி அனுப்பிய ஆளுநர்




(சென்னை)

தொடர்ந்து இரண்டாவது நாளாகவும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் முன்வைத்த ஆட்சி அமைக்கும் திட்டத்தை தமிழக ஆளுநர் ராஜேந்திர அர்லேகர் நிரா கரித்தார்.

ஆட்சி அமைக்க உரிமை கோருவதற்காக விஜய் நேற்று மீண்டும் ராஜ்பவனில் ஆளுநரை சந்தித்தார்.

ஆனால் 118 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற பின்னரே திரும்புமாறு ஆளுநர் அவரிடம் கேட்டுக்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய ஊடகங்களின் தகவலின்படி, தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை இன்னும் ரி.வி.கே கட்சியிடம் குறைவாக உள்ளதாகவும், பதவியேற்பு விழா நடைபெறுவதற்கு முன்பு 118 சட்டமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் மீண்டும் வருமாறும்



ஆளுநர் விஜய்யிடம் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமும், விஜய் 112 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உழுதுண்டு வாழ்வார்



முனைவர் ச.மனோன்மணி

வையகத்திலே சிறந்த தொழிலாக உழவுத்தொழில் மதிக்கப்படுகிறது. உழவர் சேற்றிலே கைவைக்கா விட்டால் நாம் சோற்றிலே கைவைக்க முடியாது என முன்னோர் கூறிச் சென்றுள்ளனர். உழுதுண்டு வாழ்பவர்களே உரிமையோடு வாழ்பவர்கள்.

"மற்றவர்கள் எல்லோரும் பிறரைத் தொழுதுண்டு அவர்கள் பின்னே செல்பவர்" என வள்ளுவர் திருக்குறளிலே பதிவு செய்துள்ளார். வையகத்திலே நிலத்தின் வளத்திற்கேற்பப் பல தொழில்கள் செய்யப்படுகின்றன.

குறிப்பாகப் பண்டைக் கால மக்களுடைய தொழில்கள் நிலவளத்திற்கேற்ப அமைந்திருந்தன. மலை நிலமக்கள் வேட்டைத் தொழில் செய்தனர். காட்டு நிலமக்கள் மந்தைகளை வளர்த்தனர். பாலை நிலமக்கள் களவுத் தொழிலிலே ஈடுபட்டிருந்தனர். வயல் நிலமக்கள் பயிர் செய்கையில் உழைத்தனர். கடற்கரைமக்கள் மீன் பிடித்தனர்.

இந்த ஐவகையான நிலத்தில் நடைபெற்ற தொழில்களில் உணவுத்தேவையை நிறைவு செய்யும் தொழிலாக உழவுத்தொழிலே விளங்கியது. பசியைப் போக்கும் பாரிய பணியை உழவர்களே செய்கின்றனர். அதனால் உழவர்கள் ஞாலத்தின் அச்சாணியாக விளங்குகின்றனர். அரச பணியை விட உழவர்கள் பணி மேலானது.

வளமான வயல் நிலம் ஒருநாட்டின் செல்வச் செழிப்பைக் காட்டி நின்றது. பண்டைத் தமிழிலக்கியங்கள் வயல் நிலத்தை மருதநிலம் எனக் குறிப்பிட்டுள்ளன.

பின் தோன்றிய பேரிலக்கியங்களும் நாட்டுவளத்தில் உழவுத் தொழில் பற்றியும் உழவர் சிறப்புப் பற்றியும் பதிவு செய்துள்ளன. உழவர் விளை பொருள் உணவுப் பொருளாகையால் பண்டமாற்று முறையில் நெல் விலையுயர்ந்ததாகக் கருதப்பட்டது. உழவர் வாழ்வியல் இயற்கையோடு நெருக்கமாக இருந்தது. மாரியையும் வெப்ப காலத்தையும் நன்கு கணித்துத் திட்டமிட்டு உழவர் பயிர் செய்தனர்.

உழவருடைய தொழில் நுட்பம் பண்டைக்காலத்தில் இயற்கையின் மாற்றங்களுக்கு ஏற்பவே பயன்படுத்தப்பட்டது. பயிருக்கு அளவான நீரைப் பாய்ச்ச வரம்புகள் கட்டப்பட்டிருந்தன. பெய்யும் மழைநீரைப் பயிர்வளர்ச்சிக்கு ஏற்றவாறு பயன்படுத்தி அந்த வரம்புகளே துணை செய்தன. நிலத்தை உழுது பண்படுத்தி விதை தூவி நீர் பாய்ச்சி அறுவடை செய்யும் வரை ஆறுமாதம் உழவர் தொழில் நடக்கும். விளைந்த கதிரை அறுத்து நெல்லை வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டால் ஆறுமாதம் ஓய்வாக மகிழ்வாக இருக்கலாம்.

ஆடியிலே நிலத்தை உழுது நெல்லை விதைப்பர். தைமாதம் மீண்டும் நெற்குவியலாகப் பயன் பெறுவர். களை பிடுங்கி, எருவிட்டு நீர்பாய்ச்சி உழவர் செய்யும் தொழில் உடல் நலம் தரும் தொழிலாகும். [illegible] நெல் அறுவடை செய்த பின்பும் உழவர் வாளா இருப்பதில்லை. உழுந்து, பயறு, சாமை, குரக்கன், திணை எனக் குறுகிய காலத்தில் விளையும் சிறுதானியங்களைப் பயிரிடுவர். அவற்றையும் உணவாகப் பயன்படுத்தி உடல்நலம் பேணுவர். உழவுத் தொழில் செய்வோர் வேளாளர் என்றும் அழைக்கப்பட்டனர். வேளாண்மை எனப் பயிர்ச் செய்கையை மாற்றுப் பெயர் கொண்டும் அழைத்தனர். விருந்தோம்பல் செய்யும் குணப் பண்புடையவர்களாக வேளாளர் சிறப்பிக்கப்பட்டனர்.



## வெள்ளி நற்சிந்தனை 29

இயற்கையின் துணை கொண்டு நடைபெற்ற உழவுத் தொழில் தற்காலத்தில் பொறி வயப்பட்டு நிற்கிறது. உழுதல், நாற்றுநடுதல், களைபிடுங்கல், நீர்பாய்ச்சல், கதிர் அறுத்தல் போன்றவற்றைப் பொறிகளே செய்கின்றன. உழவர் வயலில் இறங்கி வேலை செய்வதில்லை. உடையில் மாற்றம் பெற்று எந்திரப் பொறியாளராக மாறி வருகின்றனர். இதனால் மரபான உழவுத் தொழில் தொடர்பான பண்பாட்டு வாழ்வியல் நடைமுறைகளும் மாறிவிட்டன.

தமிழர் பண்பாட்டில் பண்டைய உழவுத்தொழில் தொடர்பான பழமொழிகள், விடுகதைகள், நொடிகள், தனிப்பாடல் என்பவற்றில் செய்திகள் பல பதிவு செய்யப்பட்டுள்ளன. "சீரைத் தேடின் ஏரைத் தேடு", "மேழிபிடிக்கும் கை உலகை ஆளும் கை", "ஆடி விதை தேடி விதை" போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். நிலவளமும் நீர்வளமும் உழவுத் தொழிலால் முற்காலத்தில் பெரிதும் பேணப்பட்டன. கால்நடைகள் உழவுத் தொழிலுக்குப் பெரும் பங்களிப்பைச் செய்தன. ஆடு, மாடு, குதிரை, நாய் போன்ற விலங்கினங்கள் உழவனின் நண்பர்களாக வாழ்ந்தன. உணவுத்தேட்டம் நாளாந்தம் நடைபெறும் அவலவாழ்வு உழவருக்கில்லை. ஓராண்டு உணவு தேடி வைக்கும் பண்பாடு உழவர்களால் இன்றும் பேணப்படுகிறது. உழவுத் தொழிலே உயர்ந்த தொழில் என்பதை நன்கு உணராதவரும் இன்றுள்ளர். அவர்களுடைய வயிற்றுப் பசியையும் தீர்ப்பவன் உழவுத்தொழிலாளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ரயில் மோதியதில்...

ரயில் மோதி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்துடன் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படாத நிலையில், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## சபையில்...

நீடிப்பதற்கான தீர்மானம் நேற்று (07) பாராளுமன்றத்தில் 139 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 145 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (ம-7)

## ஆதிவாசிகளின்...

இலங்கை ஆதிவாசிகளின் தற்போதைய தலைவராகக் கருதப்படும் வன்னில எத்தோ (வயது-62) நேற்று மரணமடைந்தார்.

தானிகல மகா பண்டாலகே சுதா வன்னில எத்தோ என்ற இயற்பெயரைக் கொண்ட அவர், பொதுவாக வன்னில எத்தோ என்ற பெயரில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார்.

மொனராகலை மாவட்டத்தின் மடுல்ல பிரிவுக்குட்பட்ட வேடுவத் தலைவராகவும் இலங்கை ஆதிவாசிகளின் தலைவராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

காசநோயின் காரணமாக அவர் வெலிசர காச நோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தார். (ம-7)

## டொலர்களை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல தசாப்தங்களாக இந்தப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுகளை நிர்வகித்து நாட்டை அழித்து வங்குரோத்தடைய செய்த ஒரு நாட்டையே நாங்கள் பொறுப்பேற்றோம். இப்போது அவர்கள் வந்து எமக்கு முன்னேற்ற அறிக்கை குறித்தும், "எல் - போர்ட்" (L-Board) அரசாங்கம் குறித்தும் அறிவுரை கூறுகிறார்கள். அவர்களின் அரசியல் கட்சிகளும் இப்போது அழிந்து திக்குத் தெரியாமல் அலைந்து கொண்டிருக்கின்றன.

நாங்கள் நாட்டைப் பொறுப்பேற்ற ஓராண்டிற்குள் கடந்த வருடத்தில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 109 பில்லியன் டொலர்களை அண்மித்தது. அதேபோல் வரலாற்றில் முதல்முறையாக எமது நாட்டின் தனிநபர் வருமானம் 5000 டொலர்களைத் தாண்டியுள்ளது.

நீங்கள் பல ஆண்டுகளாக அழித்த பொருளாதாரம் இது. நீங்கள் சொன்ன அந்த "எல் - போர்ட்" அரசாங்கம் ஒன்றரை வருட காலத்திற்குள் பொருளாதாரத்தை மிகவும் சிறப்பாகவும் நிலையானதாகவும் கட்டியெழுப்பியுள்ளது.

அதனால்தான் அன்று ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு வந்து, டித்வா பாதிப்பை சீர்செய்ய ஒரு ரூபாய் கூட கடனாகப் பெறாமல் திறைசேரி மூலமே இழப்பீடுகளை வழங்குவோம் என்றார். (ம-7)

## உணவு...

அனுமதியின்றி உணவு கையாளும் நிலையத்தை நடத்தி வருவதாகவும் உணவு பொதியிடலின்போது தடையை மீறி லஞ்ச்சீற் பயன்படுத்தி வருவதாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் பருத்தித்துறை நகரசபை, பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் பருத்தித்துறை நகர சபையினது அனுமதி பெறாமலும் உணவுப் பதிவுச்சான்றிதழ் இல்லாமலும் உணவுப் பொதியிடலுக்கு லஞ்ச்சீற் பயன்படுத்தியமை, உணவுத் தயாரிப்பிற்கு பயன்படும் நீரானது குடிக்கத்தகுந்தது என உறுதி செய்யத் தவறியமை, உடல்நலத் தகுதியினை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவினை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவினை கையாண்டமை மற்றும் வெளிச்சுற்றாடலினால் பாதிக்கப்படக்கூடியவாறான சூழலில் உணவினை உற்பத்தி செய்தமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக குறித்த உணவு வழங்கும் சேவை ஸ்தாபனத்திற்கு எதிராகப் பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதார பரிசோதகரான ப. தினேஸினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்றைய தினம் (07) வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் கடும் எச்சரிக்கையுடன் குறித்த உணவகம் நடத்தியவருக்கு 100,000 ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது. (ம-7,60)

## தோண்...

செம்மணிமனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 10ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட நீதிவான் எஸ்லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

அதன்போது ஏற்கெனவே அடையாளம் காணப்பட்டிருந்த என்புக்கூடுகளில் இரண்டு என்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் நான்கு சிறுவர்களது என்புக்கூட்டுத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டு அவற்றைச் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனிதப் புதைகுழியில், 259 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 254 மனித என்புக் கூட்டுத் தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை புதைகுழிக்குள் இருந்து கடந்த சில தினங்களில் மீட்கப்பட்ட, மூக்குத்தி போன்ற தான் ஆபரணங்கள், நாணயக் குற்றிகள் உள்ளிட்ட பிற பொருட்களான 14 பொருட்கள் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஓரிரு நாட்களாக புதைகுழிக்குள் இருந்து குழந்தைகளின் என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு வருவதுடன் அவை அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை நேற்று முன்தினம் புதன்கிழமை அடையாளம் காணப்பட்ட என்புக்கூடு ஒன்றின் மண்டையோட்டுப் பகுதி மாத்திரமே வெளித்தெரியும் வகையில் உள்ள நிலையில், ஏனைய பாகங்கள் மயானத்தின் தகன மேடை கட்டுமானத்திற்குள் காணப்படுவதனால் அதனை இலக்கமிடவில்லை எனவும் முழுமையான என்புக் கூட்டுத் தொகுதியையே இலக்கமிட்டு வருவதனால், தகன மேடை உடைக்கப்பட்டு முழுமையான என்புக் கூட்டுத் தொகுதி அடையாளம் காணப்பட்ட பின்னரே அதற்கு இலக்கமிடப்படும் என சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (ம-7,33)


மஹஜன சம்பத — திகதி 2026.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 6182 — R 3 1 4 7 2 7
அத சம்பத — R 4 7 2 7 — சீட்டிழுப்பு இலக்கம் 757

சுப தவசக் — திகதி 2026.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0298 — கடகம் 16 57 62 — 3858

தன நிதானய — திகதி - 2026.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் - 2212 — E 07 10 28 53 E

மெகா பவர் — திகதி 07/05/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2530 — Q 04 05 14 66 75

ஜய — 2026.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0450 — R 0 5 5 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4424 — சீட்டிழுப்பு திகதி 07.05.2026 — S 11 17 52 78

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.05.07 — சீட்டிழுப்பு இலக்கம் 1491 — மீனம் 16 37 39 50 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 07.05.2026 — வெற்றி வாரம் 0890 — 0 — 3 1 4 4 4 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,965,189.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3156 — 25000 பணப் பரிசு 56186 — சீட்டிழுப்பு திகதி 2026.05.07 — தினம் வியாழக்கிழமை — 20 21 45 61 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 122,900,967.20

சனிதா — திகதி 07.05.2026 — வெற்றி வாரம் 5317 — 19 25 44 64 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,525,772.00 — செகன்ட் சான்ஸ் ரூ. 50,000/- 56100

சசிரி — 986 — 07.05.2026 — வியாழக்கிழமை — 12 17 31 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,904,520.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4868 — சீட்டிழுப்பு திகதி 07.05.2026 — தினம் வியாழக்கிழமை — 03 15 26 62 — விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,818,220.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — P 40 01 12 20 36 — 2332 — 07.05.2026 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.261,491,990.00

அட கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2982 — சீட்டிழுப்பு திகதி 2026.05.07 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,943,046.40 — 01 04 14 27 E


Digitized by Noolaham Foundation. noolaham.org | noolaham.media

## காணாமல்...

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு வேலைத்திட்டம், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று வியாழக்கிழமை மாலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு விசேட அதிதியாக உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எமது வட மாகாணத்தைப் பொறுத்தவரை, "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம்" என்பது வெறும் அரச திணைக்களங்களின் காகிதங்களில் உறங்கும் ஒரு சாதாரண கோப்புச் சார்ந்த விடயமல்ல. இது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் ஆறாத கண்ணீரோடும் பல தசாப்த கால ஏறுமாறான காத்திருப்போடும் விவரிக்க முடியாத வலியோடும் பின்னிப்பிணைந்த ஓர் அதிஉணர்வுபூர்வமான மனிதாபிமானப் பிரச்சினையாகும். அந்த உணர்வோடு அதை அணுகவேண்டும் .

போரால் மிக நீண்டகாலமாகப் பேரழிவுகளைச் சந்தித்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை நிலைமாறுகால நீதிப் பொறிமுறை என்பது மிக முக்கியமானதொரு பேசுபொருளாகும்.

ஒருவர் உயிரிழந்தால் ஏற்படும் வலியை விட, அவர் எங்கு இருக்கிறார், என்ன ஆனார் என்றே தெரியாமல் "காணாமல் ஆக்கப்படுவதால்" ஏற்படும் வலி பல மடங்கு கொடியது.

என்றாவது ஒரு நாள் தமது உறவு வாசற்கதவைத் தட்டிவிட மாட்டார்களா? என்ற நம்பிக்கையில் காத்திருக்கும் அந்தக் குடும்பங்களின் வலியை அவர்களைத் தவிர வேறு எவராலும் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாது.

நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் ஏனைய அலுவலகங்கள் இழப்பீடுகளை வழங்குவது மற்றும் இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது போன்ற கட்டமைப்புச் சார்ந்த விடயங்களைக் கையாளுகின்றன.

ஆனால், இந்த காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மாத்திரமே மனித உயிர்களுடனும் உணர்வுகளுடனும் நேரடியாகத் தொடர்புபடும் தளத்தில் இயங்குகிறது.

இந்த வேறுபாட்டையும் இதன் ஆழத்தையும் அதிகாரிகள் முழுமையாகப் புரிந்துகொண்டால் தான் இன்றைய இந்த விழிப்புணர்வுச் செயலமர்வின் உண்மையான நோக்கத்தை உங்களால் உள்வாங்க முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, அந்தக் குடும்பங்களுக்குரிய நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறிமுறை ஒருபுறம் சுயாதீனமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அதற்குச் சமாந்தரமாக எமது நிர்வாகக் கட்டமைப்பு இந்தக் குடும்பங்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்துள்ளதா? என நாம் ஒருகணம் சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

துயரங்களால் துவண்டுபோய் எமது அரச அலுவலகங்களின் படிகளை நாடி வரும் அந்த மக்களை நாம் அவர்களுக்குரிய கௌரவத்துடன் நடத்தினோமா? அவர்களின் தேவைகளைச் சிரமேற்கொண்டு பூர்த்தி செய்தோமா? அல்லது "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக", ஏற்கெனவே பெருந்துயரில் தவிக்கும் அந்த உறவுகளை நாமும் அலைக்கழித்து, அதிகாரத்தின் இருமாப்புடன் அலட்சியப்படுத்தியிருக்கின்றோமா?

இந்தக் குற்றச்சாட்டை நான் அனைத்து அதிகாரிகள் மீதும் ஒட்டுமொத்தமாகச் சுமத்தவில்லை.

ஆனால், அவர்களுக்கு உதவும் விடயத்தில்கூட எமது அதிகாரிகளிடத்தில் ஒருமித்த, மனிதாபிமானமிக்க நிலைப்பாடொன்று இன்னமும் முழுமையாக உருவாகவில்லை என்றே நான் கருதுகின்றேன் என்றார். (ம-7)

## 40 நாடுகளின்...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (07) நடைபெற்ற குடிவரவோர் மற்றும் குடியகல்வோர் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்தும் பொருட்டு விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை காலமும் இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு 30 நாட்களுக்கு இலவச விசா வழங்கப்பட்டிருந்தது.

வெளிவிவகார அமைச்சரும் நானும் கூட்டாக இணைந்து அண்மையில் சமர்ப்பித்த கூட்டு அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைய 40 நாடுகளுக்கு இலவச விசா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பஹரைன், பெலராஸ், பெல்ஜியம், கனடா, சீனா, செக் குடியரசு, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், நேபாளம், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், இஸ்ரேல், இத்தாலி, ஜப்பான், கஸகஸ்தான், குவைத், மலேசியா, நோர்வே, நெதர்லாந்து, நியூசிலாந்து, ஓமான், பாகிஸ்தான், போலந்து, கட்டார், ரஷ்யா, சவூதி அரேபியா, தென் கொரியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிஸ்லாந்து. தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு இராச்சியம், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு 30 நாட்களுக்கு சுற்றுலாவுக்கான இலவச விசா வழங்கப்படும்.

இந்தத் தீர்மானம் ஆறு மாதத்துக்கு ஒருமுறை மீள்பரிசீலிக்கப்படும் என்றார். (ம-7)


**காணி விற்பனைக்கு**

கந்தரோடையில் 10 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**076 105 6343**
(7559)

**கணக்கீடு**

- A/L 2027 பங்குடமை ஆரம்பம் – சனி 11 A.m
- A/L 2027 Paper Class ஆரம்பம் – திங்கள் 3 P.m
- A/L 2028 கணக்கீட்டுச் சமன்பாடு ஆரம்பம் – சனி 10 A.M
- A/L 2026 மேந்தலை ஆரம்பம் – சனி 8 A.M

(7564)

**S.தவா**
B.Com (Hons)(Acc.spl), PGDE, M.A in Edu(Hons)
**DCM யாழ் நகர்**
TP : 077 239 5858

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5593) **076 825 7716** (ஆகாஸ்)

# அறிவித்தல்

## யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
### பொன்விழா சபை
### 1976 - 2026

எமது பாடசாலையின் ஐம்பதாவது ஆண்டை முன்னிட்டு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பொன்விழா நிகழ்வொன்றினை நடாத்துவதற்கு பாடசாலை சமூகம் முன்வந்துள்ளது.

இந்நிகழ்வு தொடர்பில் எமது பாடசாலை ஆரம்பமான 19.01.1976 ற்குப் பின்னர் கல்வி கற்ற பழைய மாணவர்களிடம் மலர் வெளியிடுவதற்காக, 19.01.1976 ஆரம்பித்த காலம் முதல் இந்த ஆண்டு வரைக்கும் கடமை புரிந்த அதிபர்கள், கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் முக்கிய ஆவணங்கள், பாடசாலையின் சாதனை தொடர்பிலான விபரங்கள், புகைப் படங்கள் போன்றவற்றைக் கேட்டு நிற்கின்றோம்.

பொன்விழாவையொட்டி ரி-சேட், over coat என்பன வெளியிடவுள்ளதால் அதனைப்பெற்றுக் கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அலுவலகத்தில் காலை 08 மணிமுதல் மாலை 02 மணி வரை தொடர்புகொண்டு தமது அளவு விபரங்களை 20.05.2026 ற்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர் / செயலாளர்
பொன்விழா சபை
077 501 8195
(7563)

**உடனடி வேலைவாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்

A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS**
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777
(C-5594)

**வேலையாட்கள் தேவை**

கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அடிப்படைச் சம்பளம் - 30,000/=

**076 889 1308**
**077 606 1333**
(C-5595)

**60 வது பிறந்தநாள் வாழ்த்து**
08.05.2026



**தட்ஷணாமூர்த்தி உதயசங்கர்**
(தவில் வித்துவான்)

வளர்பிறை நிலவாய் உன் ஆயுள் வளரட்டும்
வாடாத மலராய் உன் சிரிப்பு நிலைக்கட்டும்
துன்பங்கள் யாவும் தூர விலகிப் போகட்டும்
இன்பங்கள் மட்டுமே உன் வாழ்வில் துணையிருக்கட்டும்.
இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!!

HAPPY Birthday

மனியர்பதி லேன், கொக்குவில். (7560) சந்திரகுமார் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.